விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை (18.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 364

எதிர்வரும் 31-ம் திகதிக்கு முன்

## 263 ஏக்கர் காணிகள் வடக்கு, கிழக்கில் விடுவிப்பு

ஜனாதிபதி செயலணி கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 263 ஏக்கர் காணியை விடுவிக்க வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் 5 ஆவது கூட்டம் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம் 23

## தனியார் காணிகளில் படையினர் விவசாயம் செய்வதை ஏற்கமுடியாது

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி செயலணியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டு


(கொழும்பு)

தனியாருக்கு சொந்தமான காணிகளில் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய செயற்பாடுகளை மேலும் 23



# ஒற்றை ஆட்சி ஊடாகவே அரசியல் தீர்வு

ஐ.தே.க பேரணியில் பிரதமர் ரணில்



(கொழும்பு) ஒற்றை ஆட்சி ஊடாகவே அரசியல் தீர்வு வழங்கப்படும் என தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதிலிருந்து தான் ஒருபோதும் விலக மாட்டேன் என மீண்டும் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்று கொழும்பில் முன்னெடுத்த போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (23-ம் பக்.)

பாராளுமன்ற அமர்வு இன்று

## எதிர்க்கட்சி பதவிக்கு முறுகல் ஏற்படலாம்!

(கொழும்பு)

இன்றைய தினம் கூடவுள்ள பாராளுமன்ற அமர்வில், எதிர்க்கட்சித் தலைவர் பதவியினை மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்குமாறு சபாநாயகருக்கு அழுத்தம் கொடுக்கப்படுமென பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், 23

## பின் கதவால் அதிகாரத்துக்கு வந்தவர்களை முன் கதவால் வெளியேற்றினோம் - சஜித்

(கொழும்பு)

பின் கதவால் அதிகாரத்துக்கு வந்தவர்களை 50 நாள்களில் முன் கதவால் வெளியேற்றியுள்ளோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் ஊடாக ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் காலி முகத்திடலில் நீதிக்கான போராட்டம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் பாராளுமன்றில் அரங்கேறிய கொடூரமான 24

### பேச்சுவார்த்தை இழுபறி: அமைச்சுப் பதவிகளை பகிர்ந்தளிக்க தாமதம்

(கொழும்பு)

புதிய அமைச்சரவை குறித்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதால் அமைச்சரவை பதவியேற்பு தாமதமாகலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

புதிய அரசாங்கத்தில் இணைந்துக்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் தயாராகி வருவதாகவும், இதன் காரணமாக 24

## ஐ.தே.கவினர் தலைநகர் கொழும்பில் ஜனநாயக வெற்றிக் கொண்டாட்டம்

பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்கள் திரள்வு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் பேரணியில் பங்கேற்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் காலி முகத்திடலில் நேற்று திரண்டிருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரம 23

### பெரும்பான்மையின்றி சமஷ்டியை கொண்டுவர முடியாது - ஹெல உறுமய

(கொழும்பு)

புதிய அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இல்லாத சந்தர்ப்பத்தில் சமஷ்டி யாப்பை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என பிவித்துரு ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்பன்பில 24

## எதிர்க்கட்சி பதவியை விட்டுக்கொடுக்க முடியாது

சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி அரசாங்கத்தை தலைமைதாங்கும் நிலையிலும், அமைச்சரவை பிரதானியாக தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்ற நிலையிலும் இந்த அரசாங்கம் கூட்டணி அரசாங்கம் என்பதை மறுக்க முடியாது.

ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து நடத்தும் ஆட்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பிரதான எதிர்க்கட்சி என்பதை மறுக்க முடியாது.

எனவே எதிர்க்கட்சி தலைவர் பதவியை விட்டுகொடுக்க 23

### நெடுந்தீவில் எட்டு இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் எட்டு பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் பாம்பன், ஜெகதாப்பட்டினம் பகுதியை சேர்ந்த எட்டு மீனவர்களும் நேற்றிரவு நெடுந்தீவு, கடற்பரப்பி 24

சம்பந்தனின் பதவி பறிபோகலாம்?

## விட்டுக் கொடுப்புக்கு தயார் - சம்பந்தன்

(கொழும்பு)



எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளத்தயார் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் சமகால எதிர்க்கட்சித் 23

# மரண அறிவித்தல்

## திருமதி தேவராசா சிவபாக்கியலட்சுமி



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வீரபத்திரர் கோவில் வீதி கல்வியங் காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா சிவபாக்கியலட்சுமி 17.12.2018 திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - பொன்னம்மாவின் அன்பு மகளும், தேவராசாவின் அன்பு மனைவியும், அமரர்களான சிவஞானம், சரஸ்வதி, ராசரட்ணம், செல்வரட்ணம் மற்றும் யோகராசா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தாட்சாயிணியின் அன்புத் தாயாரும், ஞானதிருக்கேதிஸ்வரனின் (ஆசிரியர் - மானிப்பாய் இந்துக்கல்லூரி) அன்பு மாமியாரும், தாரணி, கபிலன், தேனுகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோவில் வீதி,
கல்வியங்காடு. (C-4747)

தகவல் : ஞானதிருக்கேதிஸ்வரன்
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)


காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய். (6730)



வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வயோதிபப் பெண்ணுக்கு சமையல் மற்றும் இதர வேலை செய்யக்கூடிய பொறுப்புக்கள் எதுவு மற்ற பணிப்பெண் தேவை.

இடம் : நெல்லியடி (C-4744)

தொடர்புகளுக்கு :
076 484 7171


# மரண அறிவித்தல்

## லோகதாசன் விஜிதசங்கர்



மாந்தை மேற்கு, பிரதானவீதி அடம்பனை பிறப்பிடமாகவும், இல.34, செல்வாநகர் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட லோகதாசன் விஜிதசங்கர் (சங்கர் N.C.TEC) அவர்கள் கடந்த 16.12.2018 அன்று காலமானார்.

அன்னார் லோகதாசன் - ரகுபதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆனந்தராசா (முன்னாள் அக்கராயன் ப.நோ.கூ.சங்கப் பணியாளர்) - சுபாசினி தம்பதியினரின் அன்பு மருமகனும், வினோபாவின் அன்புக் கணவரும், கீர்த்தனன், தஸ்வின் ஆகியோரின் தந்தையாரும், கௌரி, தர்சினி (செல்வாநகர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், திருக்குமார், நிறோஜன், துளசிகா ஆகியோரின் மைத்துனரும், லக்சனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.34, செல்வாநகரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆனந்தநகர் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வாநகர், கிளிநொச்சி. (C-4745) தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி நாகரத்தினம் இரத்தினேஸ்வரி

பிறப்பு : 14.02.1943 இறப்பு : 17.12.2018

யாழ் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், மண்கும்பானில் வசித்த வரும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய நாகரத்தினம் இரத்தினேஸ்வரி அவர்கள் 17.12.2018 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - காசுவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சிறிரங்கேஸ்வரன் (சிறி - இந்தியா), தனேஸ்வரி (ஈஸ்வரி - லண்டன்), கேதீஸ்வரி (பேபி - லண்டன்), சதீஸ்குமார் (குமார் - லண்டன்) மற்றும் காலஞ்சென்ற லோகேஸ்வரன் (ராசன்), சத்தியேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவலட்சுமி (கொழும்பு), தயாளினி (இந்தியா), ஸ்ரீகணநாதன் (லண்டன்), சுரேஸ் (லண்டன்), எழிலரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரன், வில்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகலிங்கம், கலைவாணி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், நாகம்மாவின் அண்ணியும், நவரூபன் (லண்டன்), பானுஜா, பதுஜா (இந்தியா), ஸ்றெப்பான், சந்துரு, சந்துவி, சங்கவி, சந்துஜன், சாகசன், ஹரீஸ், அருண், ஆரணி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், ஆரன், ஆசன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

மகன் :- சிறி - 0091 9790850925
மகன் :- குமார் - 0044 7535666885
பேரன் :- வாசன் - 0044 7983725157
பேரன் :- சந்துரு - 0044 7901000981


தகவல் : சிறி (இந்தியா) (C-4746)

# ரணில் அரசாங்கத்தை விரைவில் கவிழ்ப்போம்

## மகிந்த சூளுரை

(கொழும்பு)

**பதவிகளிலிருந்து விலகிச் செல்வது தமக்கு பிரச்சினை இல்லை எனவும் ரணில் தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தை விரைவில் கவிழ்ப்போம் எனவும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.**



நேற்று முன்தினம் தங்காலை கார்ல்டன் இல்லத்தில் பொதுமக்களை சந்தித்து உரையாற்றும் போதே மகிந்த இவ்வாறு சூளுரைத்தார்.

நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு பதவியை கொடுத்து விட்டு வந்தேன். அது ஒரு பெரிய விடயம் அல்ல. மக்கள் என்னோடு இருப்பது எனக்கு தெரியும் என மகிந்த தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் பெரும்பான்மையை நிரூபித்துள்ளது.

எனவே அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேம்.

அதேநேரம் அவர்களிடமிருந்து நாட்டைக் காப்பதற்காக மீண்டுமொருமுறை அவர்களது ஆட்சியை அவர்கள் நினைக்காத நேரத்தில் கவிழ்ப்போம் என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரவு விழுந்த குழியில் பகலில் விழமாட்டோம்

## புதிய அமைச்சரவை குறித்து ஐ.தே.க



(கொழும்பு)

புதிதாக அமைக்கப்படப் போவது ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையே எனவும், இதனை அமைக்கும் போது இரவு விழுந்த குழியில் பகலிலும் விழுவதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லையெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

எமக்கு எதிராக செயற்பட்ட, நாட்டின் ஸ்திரத் தன்மையைக் குழப்பியவர்களை எம்முடன் ஒருபோதும் இணைத்துக் கொள்ளத் தயாரில்லை. இத்தகைய வர்களுடன் கூட்டு அரசாங்கமொன்றை அமைக்க விரும்பவுமில்லை.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சி 30 அமைச்சர்களுடன் அமைச்சரவையை அமைக்கவும் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரதமராகப் பதவியேற்க முன்னர் ரணில்-சம்பந்தன் மந்திராலோசனை



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பிரதமராக பதவியேற்பதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சுமார் அரைமணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனும் பங்கேற்றிருந்தார்.

இந்த சந்திப்பின்போது, புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு அனைவரின் ஆதரவு எமக்குத் தேவை. எனவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியினர் அரசியலில் இணைந்து செயற்படுவதற்கு ஏனைய கட்சிகள், தரப்புகளிலிருந்து வரும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் அரவணைத்துக் கொள்ளுங்கள் என சம்பந்தன் தெரிவித்தார்.

இதேவேளை, அரசுக்கு வெளியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியையும் சேர்த்து 20 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றன. புதிய அரசு, இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான பாராளுமன்ற பலத்தை பெறுவதற்காகத் தனது தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 130 ஆக அதிகரிக்க முயல வேண்டுமெனவும் சம்பந்தன் இதன்போது ரணிலிடம் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட சில முக்கிய அமைச்சுக்கள் தொடர்பில் நியமிக்கப்படக் கூடிய அமைச்சர்கள் விடயத்தில் தாங்கள் எதிர்பார்ப்புடன் இருப்பதாக இந்த சந்திப்பின் போது சம்பந்தன் ரணிலிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய தேசியமுன்னணியில்இணைவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தரப்பிலிருந்து சில பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்புகின்றனர் என இந்தச் சந்திப்பின்போது சம்பந்தனுக்குத் ரணில் விக்கிரமசிங்க தெரியப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தவறு செய்தால் அதிகம் பேசுகின்றனர் ஒரு ஆசிரியர் நல்லதைச் செய்தால் அது தொடர்பில் பேசுவது கிடையாது

## வடக்கு மாகாண ஆளுநர் கூரே கவலை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் அனைத்து வசதிகள் இருந்தாலும் நல்ல புலமை திறமை அறிவு உள்ள சிறந்த ஆசிரியர்கள் இல்லாது போனால் கல்வியில் அந்த பாடசாலைகள் முன்னேற்றம் காண முடியாது. முன்னைய காலத்தில் கல்வியில் யாழ்ப்பாண மாணவர்கள் சிறந்து விளங்கினார்கள். யுத்தத்தினால் அவர்களின் கல்வி வீதம் வீழ்ச்சி கண்டது.







ஆனால் தற்போது கல்வி கற்பதற்குரிய நல்ல சூழல் வந்துள்ளது. இந்த நேரத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் அனைவரும் இணைந்து மீண்டும் கல்வியை முன்னுக்கு கொண்டுவர உழைக்க வேண்டும் எனவடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் 85 வீதத்திற்கு மேல் 100 புள்ளிகளை பெற்றுக் கொள்ள வைத்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரியர் ஒருவர் தவறு செய்துவிட்டால் எல்லோரும் அதை பற்றியே கதைத்துக் கொண்டிருப்பார்கள் ஆனால் ஒரு ஆசிரியர் நல்லதை செய்தால் அது தொடர்பில் பெரிதாக பேசுவது கிடையாது.

ஆனால் இன்று இந்த ஆசிரியர்களை பாராட்டுவதற்காக திட்டம் தயார் செய்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த பணிப்பாளர்கள், அதிகாரிகளுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த உலகத்திலே பல வேறு வேலை செய்தாலும் ஆசிரியர் வேலைக்கு நிகரான வேலை ஒன்றுமே இல்லை. நான் 25வருடங்களுக்கு மேல்ஆசிரியராக பணிபுரிந்துள்ளேன். எங்கு போனாலும் ஒருவர் வந்து நான் உங்களிடம் படித்தவன் என்று சொல்லுவார். அந்த நேரம் ஆசிரியர் படும் சந்தோசத்தினை சொல்ல முடியாது. அனுபவித்த ஆசிரியர்களுக்கு தெரியும்.

மக்களிடம் நாங்கள் பெற்ற கடனை அடைக்க வேண்டும். அவர்களின் பணத்தில் இலவச புத்தகத்தினை பெற்று படித்துள்ளோம். இலவச சீருடையினை பெற்று படித்துள்ளோம், இலவச கல்வியை பாடசாலையில் பெற்றுள்ளோம். பல்கலைக்கழகத்திலும் இலவசமாக படித்துள்ளோம் அந்த கடன்களை நாங்கள் சிறந்த சேவையாற்றி அடைக்க வேண்டும். யாழ்ப்பாண மாணவர்களை உதாரணமாக எடுத்து படிக்குமாறு எனது தாய் தந்தையர் என்னிடம் சொன்னார்கள் அதை உதாரணமாக எடுத்தேன்.

தீவகத்தில் இருப்போர் யாழ்ப்பாணத்திற்கு வருவது. யாழ்ப்பாணத்தில் இருப்போர் கொழும்புக்கு செல்வது. கொழும்பில் இருப்போர் வெளிநாட்டிற்கு செல்வது இதுதான் இங்குள்ள நிலை. வெளிநாட்டிலே போய் பலர் பெரிய தொழில் அதிபர்களாக இருக்கின்றார்கள்.

ஆனால் அவர்கள் தாய் நாட்டிற்கு எதுவும் செய்வது கிடையாது. அது ஒரு கவலையான விடயம்தான். நான் ஐரோப்பிய பயணத்தின் போது இதனை கண்டிருக்கின்றேன் என்று ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ரணில் தலைமையிலான ஐ.தே.க. அரசிற்கு ஆதரவில்லை 6 முதலமைச்சர்கள் தீர்மானம்

## இசுரு தேவப்பிரிய தகவல்



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்காதிருக்க ஆறு மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலமைச்சர்களே இந்த தீர்மானத்துக்கு வந்துள்ளனர். இதன்படி, மேல், வட மத்திய, தெற்கு, ஊவா, மத்திய மற்றும் வடமேல் ஆகிய மாகாணங்களின் முதலமைச்சர்களே இவ்வாறு ஆதரவளிக்காதிருக்க தீர்மானித்துள்ளதாக மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது வேறு யாராவதோ ஐ.தே.கவின் அரசாங்கத்துடன் சேர்வதாக இருந்தால், அவர் கட்சியிலிருந்து விலகிச் செல்லட்டும் எனவும் இசுரு தேவப்பிரிய மேலும் தெரிவித்தார். (இ-7)

# யார் என்று புரிகிறதா? ஆஸி., தீ என்று தெரிகிறதா?

## பெர்த்தில் பொசுங்கும் இந்தியா


ரஹானேயை ஆட்டமிழக்கச் செய்த ஆர்ப்பரிப்பில் ஹேசில்வூட்

பெர்த் டெஸ்டில் இந்தியா வசமாக சிக்கியது. அணித் தலைவர் ஹோலி, புஜாரா உள்ளிட்ட முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் விரைவாக நடையை கட்ட, 5 விக்கெட்டுக்களை இழந்து தவிக்கிறது. வெற்றிக்கு இன்னும் 175 ஓட்டங்கள் தேவை என்பதால், தப்புவது கடினம்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் இந்தியா வென்றது. இரண்டாவது டெஸ்ட் பெர்த்தில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 326, இந்தியா 283 ஓட்டங்கள் எடுத்தன. மூன்றாம் நாள் முடிவில், 2வது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்கு 132 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

**பந்துவீச்சாளர்கள் ஏமாற்றம்**

நேற்று, நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. அவுஸ்திரேலியாவின் கவாஜா, பெய்ன் ஜோடி இந்திய பந்துவீச்சை எளிதாக சமாளித்தது. கவாஜா, டெஸ்ட் அரங்கில் 14வது அரைசதமடித்தார். உணவு இடைவேளை வரை இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் இந்திய பந்துவீச்சாளர்கள் ஏமாற்றினர்.

**ஷமி திருப்பம்**

இந்நிலையில் 79ஆவது ஓவரை வீசிய மொஹமட் ஷமி திருப்பம் கொடுத்தார். இந்த ஓவரின் 5ஆவது பந்தில் அணித் தலைவர் ரிம் பெய்னை (37) வெளியேற்றினார். அடுத்த பந் தில் ஆரோன் பின்ச்சை (25) அவுட்டாக்கினார். இவரது அடுத்த ஓவரின் முதல் பந்தில் கம்மின்ஸ் ஒரு ஓட்டங்கள் எடுக்க, 'ஹட்ரிக்' வாய்ப்பு நழுவியது. தொடர்ந்து அசத்திய ஷமி 'வேகத்தில்' கவாஜா (72) 'பெவிலியன் திரும்பினார்.

பும்ரா பந்தில் கம்மின்ஸ் (1) போல்டானார். அடுத்து வந்த நேதன் லயன் (5), ஷமியிடம் சரணடைந்தார். பின் இணைந்த மிட்சல் ஸ்டார்க், ஹேசல்வுட் ஜோடி பொறுப்பாக ஆடியது. பத்தாவது விக்கெட்டுக்காக 36 ஓட்டங்கள் சேர்த்தபோது பும்ரா 'வேகத்தில்' ஸ்டார்க் (14) போல்டானார்.


இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 243 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஹேசல்வுட் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் ஷமி 6, பும்ரா 3, இஷாந்த் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

**'ரொப் ஓர்டர்' சரிவு**

பின், 287 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் 2வது இன்னிங்சை ஆரம்பித்த இந்திய அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஸ்ரார்க் வீசிய முதல் ஓவரில் லோகேஷ் ராகுல் (0) போல்டானார். ஹேசல்வுட் பந்தில் புஜாரா (4) வெளியேறினார். நேதன் லயன் 'சுழலில்' அணித் தலைவர் விராட் ஹோலி (17), முரளி விஜய் (20) சிக்கினர். இந்திய அணி 4 விக்கெட்டுக்கு 55 ஓட்டங்கள் எடுத்து திணறியது.

சிறிது நேரம் தாக்குப்பிடித்த ரகானே (30), ஹேசல்வுட் பந்தில் ஆட்டமிழந்தார். நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 2வது இன்னிங்சில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்கள் எடுத்து, 175 ஓட்டங்களால் பின் தங்கி இருந்தது. ஹனுமா விஹாரி (24), ரிஷாப் பன்ட் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

## மரண அறிவித்தல்



### இளையவன் கந்தையா

*ஆவரங்கால் கிழக்கு புத்தூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவன் கந்தையா 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற இளையவன் - செல்வி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வைரமுத்து - சோதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லன், சிவக்கொழுந்து, துரையம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரசீதரன் (லண்டன்), ரசீதா (சுகாதார அமைச்சு வட மாகாணம்), அனுஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்மி (லண்டன்), சடாச்சரலிங்கம் (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), அன்பழகன் (நவாலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் குணவதி, நாகராசா, பகவதி, சறோசா, வசந்தா, தம்பித்துரை ஆகியோரின் அன்பு மைத்துனனும் ராகுல், சேயோன், மைத்திரி, கிஜானி, அபிநயன், அதிசயன், அஸ்விகா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கௌடுது இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*


(6735)

**ஆவரங்கால் கிழக்கு,**
**புத்தூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**18 - 12 - 1939**



**மறைவு**
**17 - 12 - 2018**

### சின்னத்தம்பி சுவாம்பிள்ளை

4ஆம் வட்டாரம் முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுவாம்பிள்ளை அவர்கள் நேற்று *(17.12.2018)* இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(19.12.2018)* புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முள்ளியவளை புனித திரேசாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவுடல் முள்ளியவளை திரேசாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-4752)

**முள்ளியவளை**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## துயர் பகிர்கின்றோம்

கொக்குவில் அன்னையின் மைந்தனும்
எமது ஆலய மஹோற்சவத்தின்
சப்பைரத திருவிழா உபயகாரரும்
முருகப்பெருமானுக்கு சப்பைரதம்
ஒன்றினை அழகுற அமைத்து
தருவதற்கு முன்வந்த பெருமகனார்

**அமரர் வைத்தியகலாநிதி**
### ரவி பெருமாள்பிள்ளை



அவர்களின் பிரிவினால் துயருறும்
அன்னாரின் குடும்பத்தவரின் துயரில்
நாமும் பங்குகொள்வதோடு அமரரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**பரிபாலன சபையினரும் முருகனடியார்களும்**
**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய தேவஸ்தானம்**

(6733)

# பிரதமர் பதவியை தானம் செய்து வரலாற்றில் இணைந்த மகிந்த

(கொழும்பு)

தானாக முன்வந்து பிரதமர் பதவியை விட்டுக் கொடுத்தமையால் மகிந்த ராஜபக்ஷ வரலாற்றில் இணைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் பிரதமர் பதவியை விட்டுக் கொடுத்த ஒரே நபர் மகிந்த ராஜபக்ஷ தான் என அவர் தெரிவித்தார்.

தங்காலையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே டளஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் 15 பேர் பிரதமராக செயற்பட்டுள்ளனர். அந்த 15 பேரில் ஒருவர் கூட தாமாக முன்வந்து பிரதமர் பதவியைத் தியாகம் செய்யவில்லை.

தனது பதவியை தானமாக வழங்கிய எங்கள் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஒருவர் மாத்திரமே. அதன் ஊடாக அவர் இலங்கையின் வரலாற்றில் இணைந்துள்ளார்.

நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் மகிந்த தனது பதவியை விட்டு கொடுத்துள்ளார்.

அதனாலேயே அதற்கான சிறந்த வார்த்தையாக தானம் என்ற வார்த்தையை பயன்படுத்தினேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# "பேத்தாய்" சூறாவளி காரணமாக கடல் கடும் சீற்றம்; தொழில் பாதிப்பு



(அம்பாறை)

வங்காள விரிகுடா கடற்பரப்பில் உருவாகியுள்ள "பேத்தாய்" சூறாவளி காரணமாக அம்பாறை மாவட்டத்தில் கடல் சீற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் கடந்த ஒரு வார காலமாக கடற்றொழில் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பொத்துவில் முதல் நீலாவணை வரையான கடற்பரப்பில் பலத்த காற்று வீசி வருகின்றது. இதனால் பாரிய அலைகள் எழுகின்றன. கடல் கொந்தளிப்பின் காரணமாக சில பிரதேசங்களில் கடல் அலை சுமார் 10 அடி வரை மேலுயர்ந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

சூறாவளி காரணமாக கடற்றொழிலுக்குச் செல்ல வேண்டாமென வானிலை அவதான நிலையம் வேண்டுகோள் விடுத்ததன் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை.

இம்மாவட்டத்தில் கடல் அலையின் தாக்கத்தால் கரையொதுங்கிய சில வள்ளங்கள் அலையில் அள்ளுண்டு பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

கடந்த ஒரு வாரகாலமாக தமது வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். பொத்துவில், கோமாரி, திருக்கோவில், தம்பிலுவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை மற்றும் நீலாவணை ஆகிய பிரதேச மீனவர்கள் தமது படகுகளையும் வள்ளங்களையும் கடற்கரையிலிருந்து நீண்ட தூரத்திற்கப்பால் நிறுத்தி வைத்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் சில பிரதேசங்களில் அலையின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் கரையோரப் பிரதேசத்தில் இருந்த தென்னை மரங்கள் சில அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ஒலுவில் துறைமுகத்தினை அண்டிய பகுதியில் ஏற்பட்டுள்ள கடலரிப்பின் காரணமாக அப்பிரதேசத்தில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தில் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்களின் இயந்திரப் படகுகள் தொழிலுக்குச் செல்ல முடியாமல் தரித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இரண்டு பொலிஸார் படுகொலை

# நான்கு பிள்ளைகளுடன் தாய் உண்ணாவிரதம்

## கணவனை விடுதலை செய்யக் கோரிக்கை




(ஏறாவூர்)

வவுணதீவில் இரு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள தனது கணவனை விடுதலை செய்யுமாறு கோரி, மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நான்கு பிள்ளைகளுடன்,தாய் ஒருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை முற்பகலிலிருந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30ஆம் திகதி வவுணதீவில் இரண்டு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள அஜந்தன் எனப்படும் சி.இராஜகுமாரனின் மனைவி மற்றும் பிள்ளைகளே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தனது கணவன் கைது செய்யப்பட்டு 18 நாட்கள் கடந்துள்ள நிலையில், இது வரையில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், தனது கணவனை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், வலியுறுத்தியே குறித்த பெண் மற்றும் பிள்ளைகள் உண்ணா விரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தனது கணவர் எந்தவித குற்றமும் செய்யவில்லை. அதனை பொலிஸாரும் கூறுகின்றனர். ஆனால் அவரை ஏன் தொடர்ந்து தடுத்து வைத்துள்ளார்கள் என்பது தெரியாத நிலையில் உள்ளதாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள செல்வராணி இராஜகுமாரன் தெரிவித்துள்ளார்.

தனது கணவனே தங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்துவந்த நிலையில், கடந்த 18 நாட்களாக எந்த வித உதவிகளும் இன்றி கைக்குழந்தைகளுடன் கடுமையான துன்பத்தை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் "தனது கணவன் குற்றவாளியென்றால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி குற்றத்தினை நிரூபித்து தண்டனை வாங்கிக் கொடுங்கள் அவ்வாறு இல்லா விட்டால் அவரை விடுதலை செய்யுங்கள், அவரை விடுதலை செய்யும் வரையில் நானும் எனது பிள்ளைகளும் சாகும்வரையில் இந்த உண்ணாவிரத போராட்டத்தினை தொடர்வோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியின் கருத்துக்களை கவனத்தில் கொள்ளப்போவதில்லை

## ஐ.தே.க.எம்.பி. அலவத்துவல



பிரதமரின் பதவி ஏற்பின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையின் மூலம் ஜனநாயகத்திற்கான போராட்டம் இன்னும் நிறைவடையவில்லை என்றே கருத வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

இதேவேளை, 30 பேருக்கு வரையறுக்கப்பட்ட அமைச்சரவையில் மக்களின் எதிர்பார்ப்பின் படி மக்கள் ஆட்சியை நடத்த வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஜே.சி. அலவத்துவல இதனைத் தெரிவித்தார்.

தான் செய்த தவறுகளை எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாததன் காரணமாகவே ஜனாதிபதி அவ்வாறானதொரு உரையினை ஆற்றியிருந்தார்.

சபாநாயகர் தலைமையில் பாராளுமன்றத்தில் 123 பேர் ஆதரவுடன் எமது பெரும்பான்மையை நாம் நிரூபித்துள்ளதோடு, நீதிமன்ற தீர்ப்பின் மூலமும் எமது தரப்பு நியாயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அவருடைய கருத்துக்களை நாம் கவனத்தில் கொள்ளப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# இராசி பலன்

**மீனம்:** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரும் வாய்ப்பு ண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் அனுகூலம் தரும், கனவு பலிதமுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம்.

**மிதுனம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| செவ் | சந் | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது | கிரகநிலை | | |
| சூரி. சனி | குரு.புத | சுக் | |

சந்திராஷ்டமம்
அத்தம், சித்திரை

**18.12.2018**

மார்கழி 03, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 4.50 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 2.24 மணிவரை
சுபநேரம் 10.53-12.23 மணிவரை
இராகுகாலம் 3.23-4.53 மணிவரை
சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம்
அமிர்த சித்தம்

வளவன்

**கடகம்:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சியில் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, பகைவர்கள் விலகுவர், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்,

**துலாம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், மறதியால் ஒரு சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம் பெறலாம்.

# மாணவிக்கு நிதியுதவி



சுவிட்சர்லாந்து நாட்டில் வாழ்ந்து வரும் வடமராட்சி மைக்கல் நேசக்கரத்தின் உறுப்பினராகிய கணேசலிங்கம் சந்திரவதனா தம்பதியினரின் மகள் அனுவின் பிறந்த நாளான கடந்த 12 ஆம் திகதி பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அச்சுவேலி தெற்கு மாணவி ஒருவருக்கு கல்வி ஊக்கத் தொகையாக ரூபா ஐம்பதாயிரம் வழங்கப்பட்டது. (இ-5-60)



இறைவன் பிரம்மாவின் ஆணவம் நீங்கும் வண்ணம் அவரது ஐந்தாவது தலையை கிள்ளி அகற்றி, நான்முகனாக்கிய நிகழ்வு அட்டவீரச்செயல்களுள் ஒன்றாக குறிப்பிடப்படுகிறது. 'பரமனை மதித்திடா பங்கையாசனன் ஒரு தலை கிள்ளியே...' என்று இந்நிகழ்வை புராணம் பேசும். ஆணவம் அகற்றி அருளொளி பரப்பிய இந்த திருவிளையாடல் நேற்று முன்தினம் நல்லூர் சிவன் கோவிலில் உற்சவமாக நிகழ்த்தப்பட்டது.(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# முன்னாள் போராளிகளை தொடர்ந்து அச்சுறுத்துவது கண்டிக்கத்தக்கது!

## சீ.வீ.கே.சிவஞானம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் துளசியை நாளை 19 ஆம் திகதி மீண்டும் ஒரு முறை விசாரணைக்கு சமுகமளிக்குமாறு பயங்கரவாதத் தடைப்பிரிவு கோரியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆரம்பிக்கப்பட முன்னரும் அதற்குப் பின்னரும் விசாரணைக்கு உட்பட்டவர். அண்மைக் காலத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் வேந்தன் மற்றும் அதன் தலைவர் கதிர் ஆகியோரும் பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் விசாரணைக்கு உட்பட்டிருக்கின்றனர்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் மூன்று பிரதானிகளையும் குறிவைத்து விசாரணைக்குட்படுத்துவது அவர்களை அச்சுறுத்தி, அவர்களது ஜனநாயக நீரோட்ட இணைவை இல்லாதொழிப்பதை நோக்கமாக கொண்டதாகவே இது பார்க்கப்படவேண்டும்.

இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளாக இருந்தவர்கள் என்பதை வெளிப்படுத்தியே தமது கட்சியை ஆரம்பித்து வெளிப்படையாக செயற்படுகின்றவர்கள்.

இக் கட்சியின் உறுப்பினர்களும் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களை இப்படி அச்சுறுத்துவது அவர்களது இயல்பு வாழ்க்கைக்கு திரும்புதலை தடுக்கும் செயற்பாடாகவே காணப்படுகின்றது.

தொடர்தும் முன்னாள் போராளிகளை விசாரணை என்ற பெயரில் நான்காம் மாடிக்கு அழைத்து அச்சுறுத்தும் செயற்பாடானது கண்டிக்கத்தக்கது. உடனடியாக அரசாங்கம் இவ்வாறன செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# வங்கிக் கிளையை இடமாற்ற முடிபு

(சாவகச்சேரி)

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையை வேறு பகுதிக்கு இடம் மாற்ற வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளதாக சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை சாவகச்சேரி நகரசபையின்பொன்விழா மண்டபத்தின் கீழ்ப்பகுதியில் இயங்கி வருகின்றது.

வங்கி இயங்கி வரும் நிலப்பரப்பு சிறுவர் பொழுதுபோக்கு மையத்திற்கானது என கடந்த கால ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே நகரசபையினராகிய நாம் உலக வங்கி ஒதுக்கீட்டில் நகரசபைக்கு கிடைக்கப்பெறவுள்ள நிதியில் பழைய மீன் சந்தையுள்ள பகுதியில் மூன்று மாடி கட்டடம் அமைத்து அதனை வங்கிக்கு கொடுத்து விட்டு தற்போது வங்கி உள்ள பகுதியில் சிறுவர் பொழுதுபோக்கு மையத்தினை உருவாக்க முடியும் எனது கருத்தை தவறாகப் புரிந்து கொண்ட சிலர் நகர சபைக்கு கிடைக்கும் வருமானத்தை நாம் தடுப்பதாக கருத்து தெரிவித்து வருகின்றனர். அவ்வாறான ஒரு நோக்கம் எமக்கில்லை. வங்கியினை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு நாம் குறிப்பிடவும் இல்லை. அவர்களுக்கு உரிய கால அவகாசத்தைவழங்கிஅதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறே நாம் தெரிவித்திருந்தோம்.

அத்துடன் மேலைத்தேய நாடுகளில் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு இடங்கள் உண்டு. எமது பகுதியிலும் அவ்வாறான இடங்கள் உருவாக்கப்பட வேண்டும். எது எது எதற்கு என்று ஆவணத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதோ அது அது அந்தப்பகுதியில் இயங்குவதே சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# தேசிய ரீதியில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் அழகியல் கிளையால் வருடாந்தம் நடத்தப்படும் சமஸ்த லங்கா போட்டி-2018 இல் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் கி.கபிநாத் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றார்.

இதேவேளை தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்பட்ட போட்டியில் தேசிய ரீதியில் நாட்டார் இசைப் போட்டியில் முதலாம் இடத்தை யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் கு.டினூஜன் பெற்றுக் கொண்டார். (இ-5)

# கிராமத்தின் வளர்ச்சிக்காக நேர்மையாக உழைப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் அரிகரன்



(யாழ்ப்பாணம்)

ஒரு கிராமத்தில் வாழும் மக்கள் அந்தக் கிராமத்தின் வளர்ச்சிக்காக தம் முன்னெதிரே காணப்படும் தடைகளைத் தாண்டி நேர்மையாக உழைப்பதற்கு முன்வரவேண்டும். அவ்வாறான தொரு நிலைப்பாட்டை உருவாக்குவதன் மூலமே அழிந்துவரும் எமது பிரதேசத்தின் கல்விநிலையை மீண்டும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் அரிகரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்கு பிரதேசத்தின் ஈவினை பகுதி கலைமகள் முன்பள்ளி மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)




# ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வருடாந்த விடுமுறை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் வருடாந்த விடுமுறை எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் நிறுவனத்தின் செயற்பாடுகள் எதிர்வரும் 31 திகதி முதல் ஆரம்பாகும். (இ-5)

# குடிநீர் தேவை நிறைவு





கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் கரணவாய் மேற்கு ஜே/349 வல்லியாவத்தை கிராம மக்கள் நீண்ட காலமாக குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் முன்னாள் விவசாய பிரதியமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின் 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் குடிநீர் தேவை நிறைவு செய்யப்பட்டு கடந்த 12 ஆம் திகதி அன்று கிராம மக்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சதாசிவம் இராமநாதனால் வைபவ ரீதியாக வல்லியாவத்தை மக்களிடம் குடிநீர் திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது.

இங்கு கருத்து தெரிவித்த உறுப்பினர் இராமநாதன், கரணவாய் மேற்கு கிராமத்தில் எம்மால் விவசாய கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.


அதற்கான செயற்பாடுகள் தொடரும் வேளை, விவசாய மக்களை ஊக்குவிக்கும் முகமாக வாழ்வாதாரங்களையும், வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்கு பழமரக்கன்றுகளையும் வழங்கி வரும் வேளை கிராம மக்களின் எழுச்சிக்காக தொடர்ந்தும் உதவித்திட்டங்கள் ஏற்படுத்தப்படும் என தெரிவித்தார்.

குடிநீர் தாங்கியை அமைப்பதற்கு இலவசமாககாணியை வழங்கியிருந்த செல்லனுக்கும் நன்றிகளை தெரிவித்திருந்தார். (இ-60)



யாழ்ப்பாணம் பிரதேச செயலகமும் கலாசார பண்பாட்டு அலுவலகமும் இணைந்து நடத்திய இலக்கியப் பெருவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ். மாநகர சபை உறுப்பினர் நா.தனேந்திரனுக்கு யாழ். ரத்னா விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# வைகுண்ட ஏகாதசி... செய்ய வேண்டியதும் செய்யக்கூடாததும்..!



துப்புடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன் ஆனைக்கு நீ அருள் செய்தமையால்
எய்ப்புஎன்னை வந்து நலியும்போது அங்கு ஏதும் நானுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத் தரவணைப் பள்ளியானே!

பெருமாள் குறித்து பாடப்பட்ட நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தில் இப்படி கூறுகிறார் பெரியாழ்வார். அதாவது, ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்ட பெருமாளே! தளர்வுற்ற காலத்தில் காப்பாற்றுவர் என்ற எண்ணத்தில் த்குதி படைத்தவர்களை நம்பி வாழ்வது என்பது உலகத்தின் இயல்பே. நான் தகுதியற்றவன் என்றாலும், உன்னைச் சரணடைந்தேன். ஏனென்றால் "ஆதிமூலமே" என்று அழைத்த யானைக்காக ஓடிவந்தவன் அல்லவா நீ. அதேபோல எனது கடைசி காலங்களில் ஒருவேளை நோயால் அவதிப்படும் போது, உன்னை நினைக்க சக்தியற்றவனாகி விடுவேன். அதனால், இப்போதே உன் திருநாமத்தைச் சொல்லி வைத்து விட்டேன் என்கிறது பாடல் வரிகள்.

எனவே தேவரின் நாமத்தை சொல்வதால் கிடைக்கும் நன்மைகளை உணர்த்துகிறது இந்த பாடல். அப்படி தேவரின் நாமத்தை உச்சரிப்பதால் அளவற்ற நன்மைகள் கிடைக்கும். அதேசமயம் வைகுண்ட ஏகாதசி போன்ற புண்ணிய தினங்களில் உச்சரிக்கும் போது மேலும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஏன் வைகுண்ட ஏகாதசிக்கு இவ்வளவு சிறப்பு என்பது குறித்து விளக்குகிறார் சொல்லின் செல்வன் பி.என்.பரசுராமன்.

ஞான எந்திரியங்கள் 5. கர்மேந்திரியங்கள் 5. மனசு ஒன்றையும் சேர்த்து பதினொன்றையும் பெருமாளுடன் ஐக்கியப்படுத்தித் தியானம் இருப்பதே ஏகாதசி விரதம். உடலாலும் உள்ளத்தாலும் பெருமாளுடன் ஒன்றி யிருப்பதே உபவாசம். (விரதம் மூலம் இறைவனிடம் நெருங்கி வருதலாகும்)


மாதம் தோறும் இரண்டு ஏகாதசிகள் வரும். ஒரு வருடத்தில் 25 ஏகாதசிகள் வருகின்றன. "மாதங்களில் நான் மார்கழி" என்று சொன்ன மகாவிஷ்ணுவுக்குப் பிடித்தமான மார்கழி மாத வளர் பிறையில் வரும் ஏகாதசி எல்லா ஏகாதசிகளிலும் முக்கியமானது. இதைத்தான் "வைகுண்ட ஏகாதசி" விரதமென மக்கள் அனுஷ்டித்து வருகிறார்கள்.

**வைகுண்ட ஏகாதசி விரதம் இருப்பது எப்படி?**

வாழும் அவசர உலகில் மாதந்தோறும் வரும் ஏகாதசியை அனுசரிப்பது மிகவும் நல்லது. பிரதமை திதியிலிருந்து பத்தாவது நாளான தசமியிலும் துவாதசியிலும் ஒருவேளை உணவைத்தான் உண்ண வேண்டும். ஏகாதசி நாளில் சூரிய உதயத்துக்கு முன்பாகவே எழுந்து நீராடி, பூஜையில் அமர்ந்து அந்தப் பரந்தாமனை மனதில் தியானித்து வழிபடவேண்டும். அன்றைய தினம் முழுவதும் விரதம் இருந்து பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட வேண்டும். முதியோர்கள், உடல் நலிவுற்றவர்கள், பூஜையில் வைத்து நிவேதனம் செய்யப்பட்ட பழங்களை சாப்பிடலாம்.

பகலில் தூங்காமல் இருந்து, அன்றன்றைக்கு உரிய வேலைகளை கர்ம சிரத்தியோடு செய்து முடிக்க வேண்டும். இரவில் விழித்து பகவானின் புகழ் பாடும் பக்திப் பாடல்கள் மற்றும் பாசுரங்களைப் பாடிக்கொண்டு இறை சிந்தனையிலேயே இருக்க வேண்டும். கண்விழித்து இருந்து பகவானின் நாமத்தைச் சொல்லும் பாடல்கள், பஜனைகள் செய்து, ஆன்மீகக் கதைகளைப் படித்துக் கொண்டோ பரராயணம் செய்து கொண்டோ மனதை ஒருங்கிணைக்க வேண்டும்.

ஸ்ரீரங்கம் தொடங்கி திருப்பதி வரை உள்ள வைணவக் கோயில்களில் சொர்க்க வாசல் திறப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறும். இதில் பங்கேற்க இலட்சக்கணக்கான மக்கள் இறைவனின் அருட் கடாட்சத்தைப் பெற வரிசையில் காத்திருந்து சொர்க்க வாசல் வழியாகச் சென்று இறையருளைப் பெறுவார்கள். மறுநாள் துவாதசி நாளில் காலைக் கடன்களை முடித்துவிட்டு விருந்தினர்களுக்கு, அகத்திக் கீரை, நெல்லிக் கனி, சுண்டைக்காய் ஆகியவற்றோடு அமுது படைத்து உண்ண வேண்டும்.



**என்ன செய்யக் கூடாது?**

இரவில் கண்விழித்திருக்க வேண்டும் என்பதற்காக தாயம் ஆடுவார்கள். அதற்கு பேசாமல் தூங்கி விடுவதே நன்று. ஏனெனில் எந்த வீட்டில் தாய சத்தம் கேட்கிறதோ, அந்த வீட்டில் லட்சுமி தேவி குடியிருக்க மாட்டாள். அந்த விளையாட்டின்போது, இதோ 2 போட்டு உன் தலையை கொய்கிறேன், 4 போட்டு உன் வெட்டுகிறேன் என கூறிக்கொள்வார்கள். ஒரு தெய்வத்திற்கு உகந்த நாளில் இப்படி அபச குண வார்த்தைக்ளை கேட்டால் எப்படி இறைவனின் அருள் கிட்டும்? சினிமாவுக்கு செல்வார்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டே கண் விழித்திருப்பார்கள். இதுவும் தவறே. அதேபோல பரமபத விளையாட்டு ஆடும் வழக்கம் உள்ளது. இதையும் செய்யக் கூடாது.

ஏகாதசி அன்று உணவு அளிக்கவும் கூடாது. அந்த உணவை ஏற்கவும் கூடாது என்பது சாஸ்திர நியதி. ஏகாதசி நாளில் விரதம் இருப்பது நம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதாகும்.

இதனால் நம் மன அழுக்கைப் போக்கி எண்ணங்களை, தூய்மை அடைய செய்வது மிகவும் எளிதாகும். மனத்தூய்மை அடைந்தாலே, இனிமையான வாழ்க்கை நமக்கு அமைந்திடும். மனம், வாக்கு செயல் மூன்றையும் ஒரே நிலையில் நிறுத்துவதுதான் ஏகாதசியின் நோக்கமாகும். மூன்றும் ஒரு நிலையில் இருக்கும்போது நாம் நினைத்த காரியம் எளிதாக நிறைவேறிடும்.

## தேசிய ரீதியில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பொது நூலகம் சிறந்த சேவைக்காக தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இதற்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த 13 அம் திகதி கொழும்பில் நடைபெற்ற போது நூலகர் கி.அனிதா விருதைப் பெற்றுக் கொண்டார்.

வாசிப்பு மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள். விரிவாக்கல் சேவைகள், நடமாடும் சேவை சிறுவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு தேசிய ஆவணமாக்கல் சபையினால் சிறந்த சேவைக் கான விருது வழங்கப்பட்டது. (இ-5)

**வேலைவாய்ப்பு (VACANCY)**

FULL TIME/PART TIME
WAITER/ROOM BOY

இத்துறையில் முன் அனுபவம் அல்லது படிப்பு உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

விபரம்
SUBHAS TOURIST HOTEL
49, VICTORIA ROAD, JAFFNA
TEL:- 021 222 4923
077 727 8630
(6726)

## நாடு பல பிளவுகளாக உடைந்திருக்கும் மகிந்தவே தடுத்தார்-பசில்

(கொழும்பு)

கடந்த 50 நாட்களாக பிரதமராக மகிந்த செயற்பட்டிருக்கவில்லை என்றால், நாடு பல பிளவுகளாக உடைந்திருக்கும் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



ஹோமாகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராகச் செயற்பட்ட காலப் பகுதியில் நாட்டு மக்களுக்கு மிகவும் நன்மையான காலப்பகுதியாக காணப்பட்டதாக அவர் தெரிவித்தார். (இ-7)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இளம் சைவப்புலவர்,
கலாமோகன் பிரகான்
வாழ்வக மாணவன் கலாமோகன் பிரகான் அவர்கள் யாழ்ப்பாணம் வண். நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற 58 ஆவது சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில் *இளம் சைவப் புலவர்* என்னும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ பத்திரகாளி அம்மன் துணை கொண்டு வாழ்த்துகின்றோம்.

(C-4741)

வாழ்த்துவோர்:
பருத்தித்துறை அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அப்பா, அம்மா, சித்தி, சித்தப்பா, சகோதர, சகோதரிகள்.

## எழுதாரகைப் படகுச்சேவையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிகளில் வாழும் மக்கள் அன்றாட வாழ்வில் பல்வேறுபட்ட இன்னல்களைச் சந்தித்து வரும் நிலையில் தமது அடிப்படைத் தேவைகளில் ஒன்றான எழுதாரகைக் கப்பல் சேவை நிறுத்தப்பட்டதில் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அக்கறை செலுத்தத் தவறிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த மக்களின் வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளுக்கு கடல் வழிப் பயணத்தையே நம்பியுள்ளனர்.

அதிகளிபொருள் செலவு, அதிக பராமரிப்புச்செலவு ஆகியவற்றால் எழுதாரகைப் படகுச் சேவை நிறுத்தப்பட்டதாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்ததாக மக்கள் கூறினர்.

நெடுந்தீவு குறிகட்டுவான் கடல் பயணத்தில் ஈடுபடும் குமுதினி வடதாரகை கப்பல் சேவை இலவசமாக பயணத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் எழுதாரகைக்கு கட்டணம் அறவிடப்பட்ட போதும் தொடர்ந்து இயங்க முடியாமல் போனது தமக்கு கவலையளிப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

வட தாரகையும் குமுதினிக் கப்பலையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் கட்டணம் இன்றித் திறம்பட இயங்குவதாகவும் எழுதாரகையை ஏன்? வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கோ அல்லது வடமாகாண போக்குவரத்து அமைச்சுக்கோ சம்பந்தப்பட்டவர்கள் கையளிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என பொது மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியும் அவுஸ்திரேலியா அரசாங்கமும் இணைந்து அன்பளிப்புச் செய்த நவீன வசதிகளுடனான எழுதாரகைக் கப்பல் ஓய்வெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டமை தமக்கு கொடுக்கப்பட்ட வரப்பிரசாதத்தை இடைநடுவில் பறித்ததாக தாம் கருதுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

எனவே இவ் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ

# அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயத்திற்கு விருதுகள்

கிளிநொச்சி அம்பாள் குளம் விவேகானந்தா வித்தியாலயத்திற்கு கல்வி மற்றும் இணைபாட விதானங்களில் சிறப்பாக செயற்பட்டமைக்காக விருதுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் பாடசாலைகளின் பண்புத்தர சுட்டி,வெளிவாரி மதிப்பீடு 2017 மற்றும் 2018 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் முதன்மை பாடசாலைக்கான விருதும், 2018 தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் 93 வீதமான மாணவர்கள் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்றமைக்கான விருதும் கிடைத்துள்ளது.

மேலும் சிறந்த சுகாதார மேம்பாட்டுக்கான தேசிய விருது கடந்த 2015,2016, 2017 ஆகிய மூன்றாண்டுகளும் தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ் விருது தேசிய அளவில் ஒரேயொரு தமிழ் மொழிமூல பாடசாலையே தெரிவு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இவ் விருதை பெற்றமைக்காக மத்திய கல்வி அமைச்சினால் அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயத்திற்கு கடந்த வருடம் சுற்றாடல் தகவல் நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. (2-312)

# முல்லை. மாவட்டத்தில் 2ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை இளம்பராயத்தில் அழிவு

## மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

நாட்டில் நிலவிய மழையுடனான காலநிலையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கர் வரையான நெற்செய்கை இளம்பராயத்தில் அழிவடைந்த நிலையில் விவசாயிகள் மீள்பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ளனர் என்று மாகாண பிரதி விவசாயப்பணிப்பாளர் பி.உகநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய மழையுடனான காலநிலையால் இவ்வாண்டு மேற்கொண்ட காலபோக செய்கையில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அதாவது, சிறிய மற்றும் நடுத்தர பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கைகளிலும் மானாவாரியாக மேற்கொள்ளப்பட்ட செய்கைகளிலும் வெள்ள நீர் தேங்கியதாலும் சில குளங்கள் உடைப்பெடுத்ததனாலும் பயிர்ச்செய்கைகளில் கணிசமான பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

குறிப்பாக, கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய கடுமையான வரட்சி காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலே சிறுபோகச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் விதை நெல்லுக்கான தட்டுப்பாடும் நிலவியது. இந்நிலையில் அதிகூடிய விலைகளில் விதை நெல்லைப்பெற்று தமது பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ள நிலையில் இவ்வாறு ஏற்பட்ட அழிவுகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கள் தொடர்பில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கும் போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய மற்றும் சிறிய,நடுத்தரக்குளங்களின் கீழும் மானாவாரி நிலங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொண்டுள்ளனர்.

மழையுடனானகாலநிலையால் இரண்டாயிரம் ஏக்கர் வரையான வயல் நிலங்கள் இளம் பராயத்தில் அழிவடைந்திருந்தன. அவை விவசாயிகளால் மீள்செய்கைக் குட்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# புளியங்குளம் ஆரம்ப பாடசாலை கட்டடப் பிரச்சினைக்கு தீர்வு

(வவுனியா)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முயற்சியால் புளியங்குளம் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் எதிர்கொண்டுவந்த பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

புளியங்குளம் ஆரம்ப பாடசாலை நீண்ட காலமாக ஓலையால் வேயப்பட்ட கொட்டகையுடன் இயங்கி வந்தமையால் மழை காலங்களில் குறித்த வகுப்பறைக்குள் வெள்ளம் சூழ்ந்ததாகக் காணப்பட்டன.


இதனால் அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாவதுடன் மாணவர்களின் கற்றல் உபகரணங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் குறித்த பாடசாலையின் பழைய மாணவரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வவுனியா - புளியங்குளம் பிரதேச வட்டார செயலாளருமான விஜயரட்ணம் சுரேந்தரின் தீவிர முயற்சியின் பயனாக எக்கத்துவ எனும் நிறுவனத்தின் உதவியுடன் நிரந்தரக் கட்டடமாக அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் 50 வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

வன்னி வலம்

# மனித புதைகுழி அகழ்வுப்பணி மீண்டும் நேற்று ஆரம்பமானது



(மன்னார்)

மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியானது மீண்டும் நேற்றுத் திங்கட்கிழமை சட்டவைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமாகியுள்ளது.

மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமையில் இருந்து நேற்று முன்தினம் வரை இடம்பெறவில்லை.

கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை 116 ஆவது நாளாக இடம்பெற்ற அகழ்வுப் பணி மற்றும் அளவிடும் பணிகளுக்குப் பின்னர் அகழ்வுப் பணி இடம் பெறவில்லை.

இதற்குப் பொறுப்பான சட்டவைத்திய அதிகாரி கடமையின் நிமித்தம் கொழும்பு சென்றமையினால் இடம் பெறாதிருந்த அகழ்வுப்பணியானது நேற்று 117 ஆவது நாளாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அடையாளப் படுத்தப்பட்ட மனித எச்சங்கள் முழுவதையும் அப்புறப்படுத்தும் பணிகள் அதிகளவில் இடம் பெற்று வருகின்றன.

அவற்றில் 269 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (2-285)



மன்னார் மெதடிஸ் ஆலயத்தில் கிறிஸ்மஸ் விழா நிகழ்வு மன்னார் மெதடிஸ் ஆலய சேகரக்குரு அருட்பணி கே.ஜெகதாஸ் அடிகளார் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது...

(படம்:-மன்னார் செய்தியாளர்)

# உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் மண் அகழ்வை தடுக்க முடியும்

## மன்னார் பிரதேச சபையின் கூட்டத்தில் முடிவு

(மன்னார்)

மன்னார் பிரதேச சபை எல்லைப் பகுதிக்குள் நாளாந்தம் மணல் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருவதால் நான்கு பக்கங்களாலும் கடலால் சூழப்பட்டுள்ள மன்னார் தீவு எதிர்காலத்தில் அழிவை நோக்கிச் செல்லும் என மன்னார் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டபோது இவற்றை முற்றாக நிறுத்துவதற்கு வாக்கெடுப்பு நடத்தியபோது தமிழ்த்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவரைத் தவிர ஏனையோர் சாதகமாக வாக்களித்தனர்.

மன்னார் பிரதேச சபையின் ஒன்பதாவது மாதாந்தக் கூட்டம் அண்மையில் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாஹிர் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் 21 உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் கலந்து கொண்டிருந்தனர்.



இக் கூட்டத்தில் மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் அனல் மின் சாரத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் குறிப்பாக நடுக்குடா கடலோரத்துக்கு அருகாமையிலிருந்த மணல் திடல்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

சுனாமி காலத்தில் இவ்வாறான மணல் திட்டிகளே எமது பகுதியை கடல் வெள்ளத்திலிருந்து காப்பாற்றியது. அத்துடன் எமது பகுதிக்குள் மணல் அகழ்வு பல இடங்களிலும் நடைபெறுவதால் மன்னார் தீவு வெகு விரைவில் கடலில் மூழ்கும் அபாயம் இருப்பதாக கருத்துக்கள் வெளிப்பட்டன.

இதற்கு தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹீர் தெரிவிக்கையில், சபையிலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து மன்னார் பிரதேச சபை பகுதியில் மணல் அகழ்வு செய்வதை தடைசெய்வோம் என தீர்மானித்து கையொப்பம் இட்டுத் தந்தால் நான் முற்றாக தடைசெய்வதற்கான ஆவன செய்வதாக தெரிவித்து ஒவ்வொரு உறுப்பினர்களிடமும் வாய் மூலம் சம்மதம் பெறப்பட்டது.

அப்பொழுது அமர்வில் கலந்து கொண்ட 20 உறுப்பினர்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஜே.கொன்சன் குலாஸ் தவிர ஏனையோர் தடை செய்ய சம்மதம் தெரிவித்து வாக்களித்தனர்.

உறுப்பினர் ஜே.கொன்சன் குலாஸ் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில், நடுக்குடாப் பகுதியில் அனல் மின்சார நடவடிக்கை எடுப்போரால் கடற்கரை மணல் திட்டிகளை அழிக்கும் நடவடிக்கையை முதலில் தடை செய்யுங்கள் என தெரிவித்தார்.

இதற்கு தவிசாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்விடயத்தில் அனைத்து உறுப்பினர்களும் ஒருமித்த குரலில் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே எமது பிரதேச பகுதிக்குள் மணல் அகழ்வு செய்யாதிருக்கும் நடவடிக்கையை முன்னெடுப்பேன் என தெரிவித்தார். (2-285)

# இன நல்லிணக்கம் தொடர்பான செயலமர்வு

கிளிநொச்சி அன்னை இல்லத்தில்இன நல்லிணக்கம் தொடர்பான செயலமர்வு அண்மையில் நடைபெற்றுள்ளது.

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

இதில் அமல மரி தியாகிகள் சபையின் அருட்தந்தை செல்வரட்ணம்அடிகளார்வளவாளராக கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இதில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் இயக்குநர் அருட்தந்தை ஸ்ரனிரலஸ் மற்றும் சர்வ மதங்களை சார்ந்த பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாதவர்களை மக்கள் பாராளுமன்றம் அனுப்பி வைக்கின்றனர்

## இவ்வாறு இனி நடக்கக்கூடாது-மன்னாரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன







(மன்னார்)

**எங்கள் நாட்டில் அரசியல்வாதிகளில் பல பேர் மிகவும் மோசமானவர்கள். அதிலும் பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய பல அங்கத்தவர்கள் மிக மோசமானவர்கள். எமது நாட்டிலே அபிவிருத்தி குறைவதற்கான காரணம் அது தான். மோசமான அரசியல்வாதிகள் காரணமாக இந்த நாட்டு மக்களிடம் ஏழ்மை,வறுமை அதிகரித்துச் செல்கின்றது. இந்த நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாத இலஞ்சம்,ஊழல்வாதிகளையே மக்கள் பாராளுமன்றம் அனுப்பி வைக்கின்றனர். எதிர்வரும் காலத்தில் அவ்வாறு நடக்கக் கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



மன்னாரில் நேற்று முன் தினம் மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற தேசிய நத்தார் விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது நாட்டிலே சமாதானம், நல்லிணக்கத்திற்கு கிறிஸ்தவ கத்தோலிக்க போதனை மிக மிக முக்கியமானது.

எனவே தேச ஒற்றுமைக்கு மாத்திரம் அல்ல பல்வேறு துறைகளுக்கும் முக்கிய அங்கம் வகிக்கின்றது.

எனவே தாய்,தந்தை, பிள்ளை மாத்திரம் அல்ல சமூகத்திலே எல்லாத்துறைகளுக்கும் இந்த சமாதானம் மிக மிக அவசியம்.

வட கிழக்கிலே வாழ்கின்ற மக்களுக்கு அபிவிருத்திகள் மிக முக்கியமாக காணப்படுகின்றது.

யுத்தம் இடம் பெற்ற பிரதேசங்களிலே கூடுதலான கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் முகம்கொடுத்த மாவட்டம் இந்த மாவட்டங்கள் தான்.

யுத்தம் இடம் பெற்ற வடக்கு- கிழக்கு மாகாணங்க ளில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக அதை முன்னெடுத்து செயற்பட்டு அரசாங்கம் வருகின்றது.

நாங்கள் ஒன்றுபட்டு செய்தால் தான் அதிலே வெற்றி காண வேண்டும்.பிரிந்து செயற்படுவது நல்லதொரு காரியம் அல்ல.

சமூகத்திற்கு தேவை ஒற்றுமைதான்.வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக ஜனாதிபதி அபிவிருத்தி செயலணி ஒன்றை உருவாக்கி உள்ளேன் என்பது அனைவருக்கும் தெரிந்திருக்கலாம். அதனூடாக பல்வேறு நல்ல திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களிலே யுத்த காலத்தின் போது அரசாங்கம் பெற்றுக் கொண்ட காணிகளில் தற்போது 90 வீதமான காணிகளை விடுவித்திருக்கின்றோம். அதே போன்று வீடமைப்புத்திட்டங்களையும்நாங்கள் செய்து கொண்டு போகின்றோம்.

வடக்கிலே 50 ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.இந்திய வங்கியினூடாக அதற்கான பணமும் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த வீடமைப்புத்திட்டத்தை பெற்றுக் கொள்வதற்காக அரசியல் வாதிகள் மூன்றரை வருடங்களாக அங்கும் இங்குமாக போராடிக்கொண்டிருந்தார்கள்.

சண்டைபிடித்துக்கொண்டு இருந்தார்கள்.பல வீடமைப்புத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியாகினாலும் கூட 20 ஆயிரம் வீடமைப்பு திட்டத்தை எங்களினால் ஆரம்பிக்க முடியவில்லை.

இவ்வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அளவில் குறித்த 50 ஆயிரம் வீடமைப்பு திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் மீளவும் இந்தியாவிற்கே சென்று விட்டது. எமது நாட்டின் அரசியல்வாதிகள் எவ்வளவு நல்லவர்கள் என்று உங்களுக்கு இதன் மூலமாக நன்றாக தெரிகின்றது அல்லவா?

அன்று சண்டை இழுபறி இல்லாமல் இருந்திருந்தால் 25 ஆயிரம் வீடுகளையாவது நாங்கள் கட்டி முடித்திருக்க முடியும்.

இலஞ்சம்,ஊழல் வாதிகளையே மக்கள் பாராளுமன்றம் அனுப்பி வைக்கின்றனர். எதிர்வரும்காலத்தில்அவ்வாறு நடக்கக்கூடாது என நான் பிரார்த்திக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-285)




## வீதியை கடக்க முற்பட்ட

# நபரை மோதித்தள்ளியது பொலிஸ் பிக்கப் வாகனம்






(பரந்தன்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உமையாள் புரம் பகுதியில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு சொந்தமான ராட்டா ரக பிக்கப் ஒன்று வீதியை கடக்க முயன்ற ஒருவரை மோதித் தள்ளியதில் அவர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர் 52 வயதான ஹற்றன் டிக்கோயா பிரதேசத்தை சேர்ந்த பு.பாலசுப்பிரமணியம் எனத் தெரிய வருகின்றது. விபத்து தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு சொந்தமான ராட்டா ரக பிக்கப் வீதியை கடக்க முயன்ற ஒருவரை மோதித் தள்ளியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.அருகில் இருந்த பாலத்தில் வாகனம் மோதியதில் வாகனமும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது

வாகனத்தைச் செலுத்திய பொலிஸ் சாரதி கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (2-312)

# கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்கின்றன

## கரைச்சி பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக இரவு நேரங்களில் கட்டாக்காலிகளாகத்திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட ஏ-9 வீதி எல்லைப்பரப்புக்குள்ளும் ஏனைய பிரதான வீதிகளிலும் கால்நடைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறு காணப்படும் கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு பிரதேச சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இருந்தபோதும், கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை உரிய முறையில் பராமரிக்காது இரவுவேளைகளில் வீதிகளில் கட்டாக்காலிகளாக விட்டுள்ளதனால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன.

அண்மையில் ஏ-35 வீதியில் கண்டாவளைப் பகுதியில் வீதியில் கட்டாக்காலிகளாக விடப்பட்டிருந்த மாட்டில் மோதி கப்ரக வாகனம் ஒன்று விப த்துக்குள்ளாகியிருந்தது. இதேவேளை பரந்தன் சந்தியை அண்மித்த பகுதியிலும் இரணைமடுச் சந்தியிலும் மாட்டுடன் மோதி இரண்டு விபத்துக்கள் குறிப்பிட்ட ஒரு வார காலத்திற்குள் இடம்பெற்றுள்ளன.

இந் நிலையில் இவ்விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபை செயலாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது, இவ்வாறு வீதிகளில் இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாகத் திரிகின்ற கால்நடைகள் பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தொடர்ந்து இவ்வாறு விபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் கட்டாக் காலிகளாகத்திரியும் கால் நடைகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகவும் தொடர்ந்தும் இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாக விடப் படும் கால்நடை உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக் கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(2-315)

# தென்னைப் பயிர்ச்செய்கை சபையால் வழங்கப்படும் குறைந்த வட்டியுடனான இலகு கடன் திட்டம்

தென்னைப்பயிர்ச் செய்கை சபையினரால் வழங்கப்படும் வட்டி மீளளிப்புடன் கூடிய இலகு கடன் திட்டத்தினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 100 பயனாளிகள் ஏறத்தாழ 43 மில்லியன் ரூபா பணத்தினை இவ்வருடம் இலகு கடனாகப் பெற்று தமக்குச் சொந்தமான 350 ஏக்கர் காணிகளில் ஊடு பயிர்ச்செய்கையுடன் கூடிய தென்னைப்பயிர்ச் செய்கையினை ஆரம்பித்துள்ளார்கள். இவ் இலகு கடன் தொகையினைப் பெறுபவர்களின் எண்ணிக்கை கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 12% இனால் அதிகரித்துள்ளது. அத்துடன் இக் கடன் திட்டத்தில் பங்கு பற்றி வட்டி மீளளிப்பினை பெறுபவர்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

அடுத்த வருடம் இக்கடன் திட்டத்தில் அதிகளவு தென்னைச் செய்கையாளர்கள் பங்கு பற்றி பயனடைய வேண்டும் என்பதற்காகவும் இக்கடன் திட்டத்துடன் தொடர்புடைய சகல தரப்பினருக்கும் ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காகவும் இக்கட்டுரையானது மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.

இக் கடன் திட்டமானது இலங்கையில் 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் இத்திட்டமானது வட பகுதியில் யுத்தத்தின் பின்னர் தான் படிப்படியாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, செலான்வங்கி, யூனியன் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, வர்த்தக வங்கி ஆகிய நிதி நிறுவனங்கள் பங்கு வகிக்கின்றன.

மற்றைய விவசாயக் கடன் திட்டங்கள் போலன்றி இக் கடன் திட்டமானது நிதிசார்ந்த உதவிகளைச் செய்வது மட்டுமல்லாமல் தொழில்நுட்பம் சார் விரிவாக்க உதவிகளையும் வழங்குகிறது. அத்துடன் தென்னை பயிர் செய்யும் இடங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், தென்னை பயிரிடுவோரின் தொழில் வாய்ப்பை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை கூட்டுதல், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற நோக்கங்களையும் உடையது.

**இக்கடன் திட்டத்திற்கு பொருத்தமானவர்கள்**

1) மேற்கூறப்பட்ட நிதி நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள்.

2) தென்னங்காணி உரிமையாளர்கள் (உறுதி அல்லது அனுமதிப்பத்திரம் உடையவர்கள்) அல்லது நீண்டகாலக் குத்தகையாளர்கள்,

3) மொத்தத் திட்டத்திற்கான செலவில் குறைந்தது 50% ஐ ஆவது செலவழிக்கத் தயாராக இருக்கக் கூடியவர்கள்.

4) நிதி நிறுவனங்களில் கடன்களைப்பெற்று அதை ஏற்கனவே மீளக்கட்டியவராக இருக்க வேண்டும்.

5) 0.5 ஏக்கர் (8 பரப்பு) தொடக்கம் 50 ஏக்கர் வரையிலான மேட்டு நிலத்தை உடையவராக இருக்க வேண்டும்.

6) விண்ணப்பதாரி 53 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால், அவருக்கு 18 வயதிற்கு மேற்பட்ட பின்னுறுத்தார் ஒருவர் கையொப்பமிட வேண்டும்.

7) வங்கிகளால் ஏற்றுக் கொள்ளக் கூடிய இருவர் பிணையாளராக இருக்க வேண்டும்.

8) ரூ.200,000 இற்கு மேற்பட்ட தொகைக்கு வங்கிகளால் ஏற்றுக்கொள்ளக் கூடிய அசையாத, அசையும் சொத்துக்களை வங்கி தன்னகத்தே வைத்திருக்கும் (அடைமானம்) நிபந்தனைக்கு சம்மதித்தவராக இருக்க வேண்டும்.

இக்கடன் திட்டமானது

→ ஒரு ஏக்கருக்கு (16பரப்பு) ஆகக் கூடிய தொகையாக ரூபா. 125,000/= படி மூன்று மில்லியன் வரை விண்ணப்பிக்கலாம்,

→ ஆண்டு வட்டி 9%

→ 3 வருடம் அல்லது 5வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்

→ வட்டியும் முதல் தொகையும், மாதாந்தமாக அல்லது காலாண்டிற்கு ஒரு முறை கட்டி முடிக்க வேண்டும்.

→ வெற்றிகரமாகவும் நிதித் திட்டத்திற்கு ஏற்ற வகையிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்பவருக்கு முதலாம் வருட வட்டித் தொகையானது காணியின் நிலை மற்றும் பயிர்ச் செய்கையின் தன்மை என்பவற்றிற்கு அமைவாக 100% திருப்பிச் செலுத்தப்படும்.

→ 2ம், 3ம், 4ம், 5ம் - வருடங்களில் காணியின் நிலை மற்றும் பயிர்ச் செய்கையின் தன்மை என்பவற்றிற்கு அமைவாக 50% வட்டி திருப்பிச் செலுத்தப்படும்.

→ இவ்வாறு வட்டி மீளளிப்புச் செய்யப்படுவதால் வினைத்திறனான வட்டி வீதமானது 4% ஆகும்.

**எவ்வாறு இக்கடன் திட்டத்தை பெறுவது**

தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய காரியாலயத்திலோ அல்லது கமநல சேவைத் திணைக்களத்திலுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரின் அலுவலகத்திலோ உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்த வேண்டும்.

பின்னர் இப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவமானது உரிய வங்கிக் கிளையில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டு வங்கியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இப்படிவத்தை பிராந்திய காரியா லத்திலோ அல்லது தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடமோ கையளிக்க வேண்டும்.

இக்கடனுக்காக விண்ணப்பிக்கப்பட்ட இடமானது பண்ணைத் திட்டமிடல் அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பதாரிக்குரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

இக் கடன் திட்டத்திற்குரிய சேவைக் கட்டணமானது விண்ணப்பதாரியால் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய காரியாலயத்தில் செலுத்தப்பட வேண்டும். (அதாவது கடன் பெற விண்ணப் பிக்கும் காணியின் அளவானது 5 – ஏக்கருக்கு உட்பட்டிருப்பின் ரூபா.500 – உம் மேலதிகமான ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூபா 50 – உம் செலுத்தப்பட வேண்டும்) இதன் பின்னர் பண்ணை திட்டமி டல் அறிக்கை, நிதிக்கூற்று, கடன் திட்ட அறிக்கை என்பன தயாரிக்க ப்பட்டு அதன் பிரதிகள் வங்கிக்கும் உரிய விண்ணப்பதாரிக்கும் அனுப்பப்படும்.

தேவையேற்படின் வங்கிகளால் விண்ணப்பதாரியின் இடமானது பரிசீலிக்கப்படும். இதன் போது விண்ணப்பதாரி உரிய விபரங்களை, உரிய வங்கிக்கு வழங்க வேண்டும். விண்ணப்பதாரியால் அவருடைய காணி சம்பந்தமான சகல ஆவணங்களின் மூலப்பிரதிகள் உரிய வங்கிக்கு பரிசீலனைக்காக வழங்க வேண்டும். விண்ணப்பதாரிக்கும், வங்கிக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று தயாரிக்கப்படும். கடனானது தவணைகளாக (இரண்டு அல்லது மூன்று) விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும்.

தென்னைப் பயிர்ச் செய்கை சபை நிதி நிறுவனங்களின் ஊடாகவே கடன்களை வழங்கி வருகின்றது. வர்த்தக வங்கி (Commercial Bank), பிரதேச அபிவிருத்தி வங்கி (Regional Development Bank), ஹற்றன் நஷனல் வங்கி (Hatton National Bank) மூன்றினூடாகவும் இக் கடன் திட்டத்தை குழுக் கடன்களாக பெறலாம். அதாவது மூவர் கொண்ட குழு தலா ரூ. 125,000 ஐ கடனாகப் பெறலாம். தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து இக்கடனைப் பெற்று தங்களுடைய தென்னங்காணிகளை அபிவிருத்தி செய்து தங்களினதும் நாட்டினதும் பொருளாதார அபிவிருத்திக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்து பயனடைய வேண்டும் என்பது தான் தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் இலக்குகளில் ஒன்றாகும்.

இவ் இலகு கடன் திட்டத்திற்குரிய பதிவுகள் தற்போது தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. தாங்கள் மேலதிக தகவல்களைப் பெற தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் நாவலர் வீதியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்துடனோ (021 222 6014) அல்லது கமநல சேவைத் திணைக்களத்தில் அமைந்துள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களையோ அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தர்களையோ நாடவும்.

**இக்கடன் திட்டத்தின் வகைகளும் கொடுப்பனவுகளும்**

| தொ. இல | முன்மொழிவு | நடவடிக்கை | ஒரு ஏக்கருக்குரிய கடன் தொகை |
|---|---|---|---|
| 1 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னை புது நடுகை | புது நடுகை செய்தல். ஊடு பயிர் செய்தல் நீர். பசளை முகாமைத்துவம் | ரூ.125,000.00 |
| 2 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னை மீள்நடுகை | காய்க்காத மரங்களை அகற்றி அவ்விடத்தில் புது மரங்களை நடுதல். ஊடுபயிர் வளர்ப்பு நீர் பசளை முகாமைத்துவம் | ரூ.125,000.00 |
| 3 | ஊடு பயிர் வளர்ப்புடன் கூடிய தென்னங்காணி புனர் நிர்மாணம் செய்தல் | ஊடுபயிர். மண் பாதுகாப்பு . நீர் பசளை முகாமைத்துவம் | ரூ.125,000.00 |
| 4 | தென்னங்காணி புனர் நிர்மாணம் செய்தல் | நீர். பசளை முகாமைத்துவம் மூடுபடையிடல் மேலதிக மரங்களை அகற்றி புது மரங்களை நடல். பீடை நோய் முகாமைத்துவம் | ரூ.50,000.00 |
| 5 | தென்னை புது நடுகை மாத்திரம் | புது நடுகை, மண், நீர் பாதுகாப்பு, பசளையிடல் | ரூ.25,000.00 |
| 6 | குழாய் நீர்ப்பாசனம் செய்தல் | கிணறு கட்டுதல், நீர் இறைக்கும் இயந்திரம். குழாய் நீர்ப்பாசனத்தொகுதி | ரூ.50,000.00 |
| 7 | மாடு, எருமை போன்ற விலங்குகளை முதிர் தென்னைகளுக்கிடையில் வளர்த்தல் | மாட்டுத்தொழுவம் அமைத்தல், விலங்குகள், உபகரணங்கள் வாங்குதல் (இதற்கு கட்டாயமாக ஒரு ஏக்கர் நிலமும் இரண்டு பசுக்களும் வளர்க்கப்பட வேண்டும்) | ரூ.150,000.00 |
| 8 | ஆடு, செம்மறி போன்ற விலங்குகளை முதிர் தென்னைகளுக்கிடையில் வளர்த்தல் | கொட்டில் அமைத்தல், விலங்குகள், உபகரணங்கள் வாங்குதல் (இதற்கு கட்டாயம் 01 ஏக்கர் நிலமும் 01 கடாய். 06 மறி வளர்க்க வேண்டும்) | ரூ.150,000.00 |

ஈஸ்வரன் சற்குணன்
பண்ணைத் திட்டமிடல் அதிகாரி, தென்னைப் பயிர்ச் செய்கை சபை,
யாழ்ப்பாணம்.

# கைதடி நூலகத்திற்கு விருது




(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தின் (ஐப்பசி) பிரதான விழா கடந்த 13 ஆம் திகதி கொழும்பு பத்தரமுல்ல அபேகம "மஹவலவ்வே" மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் 2017 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தில் சிறப்பாக செயற்பட்டமைக்காக கைதடி பொதுநூலகத்திற்கு தேசிய நூலக ஆவணமாக்கல் சபையால் விருது வழங்கப்பட்டது.

இவ் விருதை பேராசிரியர் கே.ஜி.கருணவிதானவிடமிருந்து நூலகர் திருமதி இ.சிவசுப்ரமணியம் பெற்றுக் கொண்டார். கைதடி பொது நூலகம் பெற்றுக்கொள்ளும் எட்டாவது விருது இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இலங்கை ஜனநாயக தீர்மானம் ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கும், அதனது அரசியல் யாப்புக்கும் இணைவாக மேற்கொள்ளப்பட்ட அமைதியான, ஜனநாயக ரீதியான தீர்மானத்தை இலங்கையின் நிலை யான நண்பன் என்ற வகையில், தாம் வரவேற்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் மீளெழுதலை போற்றுவதுடன், இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் அதன் செழிப்பிற்குமான முயற்சிகளுக்கும் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவோம் எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# 'ஒருஅடி பின்னோக்கி நகர்வது இரண்டடி முன்னோக்கி செல்ல'

(கொழும்பு)

ஒரு அடி பின்னோக்கி நகர்வது. இரண்டடி முன்னோக்கிசெல்வதற்கே என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பீ. திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாட்டில் நிலவிய அரசியல் நெருக்கடிகளால் 11 சுயாதீன ஆணைக்குழுக்கள் செயலிழப்பு

(கொழும்பு)

பொதுச்சேவை, நீதித்துறை, நிதித்துறை, பொலிஸ், தேர்தல்கள் மற்றும் மனித உரிமைகள் உட்பட பல துறைகளை மேற்பார்வை செய்வதற்காக நியமிக் கப்பட்டிருந்த இலங்கையின் சுயாதீன ஆணைக்குழுக்கள் அவற்றின் தலைவர்களினதும் உறுப்பினர்களினதும் 3 வருட பதவிக்காலம் காலாவதியானதைத் தொடர்ந்து நவம்பர் 19 ஆம் திகதியுடன் செயலிழந்து போய் விட்டன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த ஆணைக்குழுக்களின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் மீண்டும் நியமனம் செய்யவேண்டும் அல்லது அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்தைத் தொடர்ந்து புதிய உறுப்பினர்களை நியமிக்கவேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவைகள் ஆணைக் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் முறைப்பாடுகளை விராரணை செய்வதற்கான ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, பல்க லைக் கழக மானிய ஆணைக் குழு, அரசகரும மொழிகள் ஆணைக்குழு என்று 11 ஆணைக்குழுக்கள் 2015 நவம்பர் 19 ஆம் திகதி நியமிக்கப்பட்டன.

நவம்பர் 19 தொடங்கிய அடுத்த மூன்று வருடங்களுக்கு அரச நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கு இந்த ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிக்கவேண்டும் அல்லது தற்போதைய தலைவர்களினதும் உறுப்பினர்களினதும் பதவிக்காலங்களை நீடிக்கவேண்டும் என்று பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தின் உயர் மட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் தற்போது அன்றாட நிர்வாக அலுவல்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கின்ற அதேவேளை, புதிய உறுப்பினர்களை நியமிப்பதன் மூலமாக அல்லது தற்போதைய உறுப்பினர்களின் பதவிக்காலத்தை நீடிப்பதன் மூலமாக அவற்றை மீளமைக்க வேண்டிய அவசரத்தேவை இருக்கிறது என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான வழமையான நடைமுறை கடந்த ஒரு மாதத்துக்கும் கூடுதலான காலமாக நீடித்த அரசியல் நெருக்கடியால் தடைப்பட்டிருந்தன. அந்த நெருக்கடி காரணமாக ஆணைக் குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானங்களை எடுப்பது சாத்தியமானதாக இருக்கவில்லை.

ஆணைக்குழுக்களை மீளச்செயற்படுத்தவோ அல்லது தற்போதைய உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நீடிக்கவோ ஜனாதிபதி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதன் விளைவாக பொது நிர்வாகத்தில் இன்னொரு நெருக்கடி தோன்றும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அரசியல் நெருக்கடி ஒரு முடிவுக்கு வந்திருப்பதாக நம்பப்படுகின்ற நிலையில், சுயாதீன ஆணைக்குழுக்களை மீளச்செயற்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டியது அவசியமாகும். அல்லாவிட்டால், ஆணைக்குழுக்களுக்கு சுயாதீன தலைமைத்துவம் இல்லாமல் அவை அரசாங்கத்தின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் வரும் விரும்பத்தகாத நிலை தோன்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலைகளின் கீழ் ஆணைக்குழுக்களின் தலைவர்களும் உறுப்பினர்களும் அரச நிறுவனங்களை மேற்பார்வை செய்வதில் தங்களது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

ஆணைக்குழுக்கள் அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் இடைக்கால ஏற்பாடுகளின் கீழேயே தற்போது அவற்றின் பணிகளைத் தொடருகின்றன. திறைசேரியினால் விதிக்கப்பட்டிருக்கும் நிதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக வழமையான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆணைக்குழுக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றன. இந்த இடத்தில்தான் ஆணைக்குழுக்களின் சுயாதீனம் சோதனைக்குள்ளாகிறது என்று சுட்டிக்காட்டும் அரசியல் அவதானிகள் ஜனாதிபதி உடனடியாக ஆணைக்குழுக்களை மீளச்செயற்படுத்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். (இ-7)

# முன்னாள் போராளிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக உறுப்பினர் றெமீடியஸ் உதவி



(யாழ்ப்பாணம்)

சமூகத்தில் வறிய நிலையில் வாழும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாநகரசபை உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான மு.றெமீடியஸ் தனது மாநகரசபை உறுப்பினர் பதவிக்கான இம்மாதத்திற்குரிய மாதாந்தக் கொடுப்பனவையும் செபஸ்ரியாம்பிள்ளை நியூட்டன் என்ற முன்னாள் போராளிக்கு வழங்கினார்.

யாழ்.மாநகர சபையின் அனைத்து உறுப்பினர்களும் தத்தமது பங்களிப்பை ஓரளவேனும் முன்னாள் போராளிகளுக்கு வழங்க வேண்டும் என்று யாழ். மாநகர சபையின் கன்னி அமர்வில் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் மற்றுமொரு மாநகரசபை உறுப்பினர் றீகன் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனாலும் குறித்த முன்மொழிவு சபையில் ஏற்றுக்கொள்ளப்படாது போன நிலையிலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் றெமீடியஸ் வறிய நிலையில் வாழும் முன்னாள் போராளிகள் பலர் சுயதொழிலுக்கான முதலீடுகள் இன்றி தமது குடும்பத்தை கொண்டு செல்ல் முடியாத நிலையில் வாழ்ந்து வருவதை கருத்தில்கொண்டு அவர்களது வறுமை நிலையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக தனது மாதாந்த கொடுப்பனவை வழங்கி வருகின்றார்.

இந்நிலையில் அவர் தனது இம் மாதத்துக்குரிய கொடுப்பனவை முன்னாள் போராளியின் சுயதொழிலுக்காக கடற்றொழில் உபகரணங்களை வழங்கிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முடிந்தால் நாடாளுமன்றைக் கலையுங்கள் பிரதமர் ரணிலுக்கு மகிந்த அணி சவால்

(கொழும்பு)

முடிந்தால் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான யோசனை ஒன்றை முன் வைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் விடுப்பதாக மகிந்த அணி நாடா ளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



அரசமைப்பு மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து அதில் வெற்றியும் பெறப்பட்டுள்ளது. மக்களை மதிக்கும் பிரதமர் எனில் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான யோசனையொன்றை உடன் முன்வைக்கவும்.

ஏனெனில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான காலம் இப்போது சரியென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த நாடாளுமன்ற கலைப்புத் தொடர்பான யோசனைக்கு நாம் கையுயர்த்த தயாராகவிருக்கின்றோம். மக்களின் அபிலாஷை களை அழிக்க 117 பேருக்கு இடமளிக்கப்படாது.

எனவே நாளையே இந்த யோசனையை முன்வைக்குமாறு நாம் சவால் விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(கரணவாய்)

மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பாடசாலை மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மைக்கல் நேசக்கரம் ஊடாக உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த அமரர் கௌரி அம்பாள் நினைவாக முல்லைத்தீவு, அச்சுவேலி, வடமராட்சி பகுதிகளைச் சேர்ந்த மாவீரர் குடும்பங்கள் மற்றும் உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு வறுமை நிலையில் கல்வி கற்று வரும் ஏழு மாணவர்களுக்கு நேற்று கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (இ-60)

# விபத்தில் இளைஞன் பரிதாபமாகப் பலி!

குருநாகல்-தம்புள்ள பிரதான வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார்சைக்கிள் ஒன்று தனியார் பேருந்து ஒன்றின் மீது மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியை வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பஹலகம என்ற இடத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவரே குறித்த விபத்தில் உயிரிழந்து ள்ளார்.

இதனையடுத்து குறித்த பேருந்துச் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கொக்கரெல்ல பொலிஸார் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்பு அநீதியானதும் நியாயமற்றதுமாகும்

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்


(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கான முகாமைத்துவ உதவியாளர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார். அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

கிழக்கு மாகாண சபைக்கான முகாமைத்துவ உதவியாளர்களின் ஆட்சேர்ப்பானது அநீதியானதும் நியாயமற்றதுமாகும். 1981 களில் கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரமானது தமிழர்கள் 42 வீதமாகவும் முஸ்லிம்கள் 32 வீதமாகவும் சிங்களவர்கள் 26 வீதமும் என்ற அடிப்படையில் இருந்தது.

கடந்த 1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னர் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் தற்போது தான் தமது வாழ்விடங்களுக்குத் திரும்பி வருகிறார்கள்.

எனவே நீதியை நிலைநாட்டும் முகமாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் விநயமாக கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய அநீதியான நடவடிக்கைகளானது நல்லிணக்கத்திற்கு மிக பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை ஜனாதிபதி நீங்கள் அறிவீர்கள்



என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதேவேளை, கிழக்கு மாகாண சபைக்கான முகாமைத்துவ உதவியாளர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பில் நான் கிழக்கு மாகாண ஆளுநருக்கு டிசெம்பர் 10 மற்றும் 16 ஆம் திகதிகளில் கடிதம் எழுதியதாகவும் என அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# அரசாங்கத்தில் இணையவுள்ள சு.க. உறுப்பினர்களுக்கு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள எந்தவொருவருக்கும் தனது சொந்த கருத்தின் அடிப்படையில் புதிய அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள முடியும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. டீ.ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அவ்வாறு அரசாங்கத்துடன் இணைந்து கொள்பவர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உதவிகள் கிடைக்க மாட்டாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## எமனான கோயில் பிரசாதம்; உயிரிழப்பு 15 ஆக உயர்வு

(சென்னை)

கர்நாடகாவில் கோயில் பிரசாதத்தை உட்கொண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளதென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கர்நாடக மாநிலத்திலுள்ள சுல்வாடி எனும் கிராமத்தில் அமைந்துள்ள மாரியம்மன் கோயிலில் கடந்த 14ஆம் திகதி சிறப்பு பூஜை இடம்பெற்றது. பூஜை முடிந்ததும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த பிரசாதத்தை உட்கொண்ட பக்தர்கள் திடீரென மயக்கமுற்றனர். இவர்களில் 2 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் உயிரிழந்தனர்.



மேலும், பிரசாதத்தை உட்கொண்ட சிறிது நேரத்தில் சுமார் 11 பக்தர்கள் சம்பவ இடத்திலேயே மயக்கமுற்ற நிலையில் உயிரிழந்தனர்.

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். இதனால் உயிரிழப்பு 15 ஆக உயர்ந்தது.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பாக கோயில் நிர்வாகி உள்ளிட்ட 7 பேரை தனிப்படை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை நடத்தி வருகின்றார்கள். இச்சம்பவத்தில் தொடர்புடைய கிருஷ்ணகிரியை சேர்ந்த காலப்பா என்ற பூசாரியை கைது செய்வதற்காக பொலிஸார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## கிறிஸ்தவ குடியிருப்பு... 15 பயங்கரவாதிகளின் ம... உறுதிப்படுத்தி இராணுவ...

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நாட்டின் பெஷாவர் நகரில் கிறிஸ்தவ குடியிருப்பு பகுதிக்குள் கொலைவெறி தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளின் மரண தண்டனையை இராணுவத் தளபதி உறுதிப்படுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் பெஷாவர் நகரில் கிறிஸ்தவ மக்கள் அதிகமாக வசிக்கும் குடியிருப்பு பகுதிக்குள் கடந்த 2016ஆம் ஆண்டில் நுழைந்த பயங்கரவாதிகள் அங்கிருந்த வீடுகள், பள்ளிகளை சூறையாடியதுடன் தற்கொலைப்படை தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள், இராணுவ வீரர்கள் என 34 பேரை ஈவிரக்கமின்றி கொன்றனர்.

இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்ற ஜமாத் உர் அஹ்ரார் பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்த இப்ரார் என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் மீது இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. மேலும், நாட்டின் பல பகுதிகளில் பயங்கரவாத தாக்குதல் நடத்தியதாக தொடரப்பட்ட சில வழக்குகளில் தொடர்புடைய 15 பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனையும், 20 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், 'அந்நாட்டின் சட்டப்...

## பசுவதைக்கு எதிரான கலவரம்

## குற்றவாளிகளை கைது செய்வதில் உ.பி.பொலிஸார் மெத்தனம்

(உத்தரப்பிரதேசம்)

தொலைக்காட்சிகளில் பேட்டி தரும் புலந்த்ஷெஹர் கலவரக் குற்றவாளிகளை கைது செய்வதில் உ.பி. பொலிஸார் மெத்தனம் காட்டுவதாகப் புகார் எழுந்துள்ளது. இந்த கலவரத்தில் பலியான ஆய்வாளர் வழக்கில் கைதான இராணுவ வீரரிடம் கொலைக்கு பொறுப்பு ஏற்கும்படியும் உ.பி. பொலிஸார் வற்புறுத்துவதாகக் தெரிவிக்கப்படுகிறது.



உ.பியின் புலந்த்ஷெஹரின் மஹாவ் கிராமத்தில் கடந்த 3ஆம் திகதி பசுவதையின் பெயரில் கலவரம் நிகழ்ந்தது. இதில், புலந்ஷெஹரின் சாய்னா காவல் நிலைய ஆய்வாளர் சுபோத் குமார் சிங் மற்றும் மாணவர் சுபம் சிங் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

கலவரத்தை நடத்தியதாகவும், இருவரது கொலை வழக்கிலும் முக்கிய குற்றவாளிகளாக புலந்த் ஷெஹர் மாவட்ட பஜ்ரங்தளம் அமைப்பாளரான யோகேஷ் ராஜ், அவரது அமைப்பு சகாக்களான ஷிகார் அகர்வால் மற்றும் உபேந்திர ராகவ் ஆகியோர் மீது வழக்கு பதிவானது.

மேலும், வழக்கில் குறிப்பிட்ட 76 பேரில் 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். பலர் தலைமறைவாக உள்ளனர். ஆனால், அவர்கள் தொலைக்காட்சிகளுக்கு பேட்டி தருவது தெரிந்தும் முக்கிய குற்றவாளிகளை பிடிப்பதில் உ.பி. பொலிஸார் சுணக்கம் காட்டி வருவதாகப் புகார் எழுந்துள்ளது.

இது குறித்து 'இந்து தமிழ்' நாளேட்டிடம் பொலிஸார் தெரிவிக்கும் போது, "ஊடகங்களுக்கு பேட்டி அளிப்பவர்களை பிடிக்க அதிகாரிகள் ஆர்வம் காட்டவில்லை. முக்கிய குற்றவாளிகளில் ஒருவர் நொய்டாவில் ஒரு தொலைக்காட்சி ஸ்டூடியோவில் பேசுவதாக தகவல் கிடைத்தும் அவர் கைது செய்யப்படவில்லை.

இதற்கு பதிலாக கைது செய்யப்பட்ட இராணுவ வீரரை ஆய்வாளர் சுபோத்தின் கொலைக்கு பொறுப்பேற்கும்படி வற்புறுத்தி வருகின்றனர்" எனத் தெரிவித்தனர்.

புலந்த்ஷெஹர் சம்பவம் மதக் கலவரத்தை உருவாக்கும் நோக்கில் திட்டமிடப்பட்டது எனத் தெரியவந்துள்ளது.

எனவே, ஆய்வாளர் கொலை வழக்கை முடித்து வைப்பதில் உ.பி. அரசு அதிகம் ஆர்வம் காட்டுவதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## ஹெலிகொப்டர் அம்... இரு விமானிகள் உ...

(லிஸ்பன்)

போர்த்துகல் நாட்டில் ஹெலிகொப்டர் அம்புலன்ஸ் விழுந்து நொறுங்கிய விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

போர்த்துகல் நாட்டில் தொலைதூர பகுதிகளில் இருக்கும் நோயாளிகளை முக்கிய பெருநகரங்களுக்கு கொண்டு வருவதற்காகவும், நோயாளிகளை சந்தித்து அவசர சிகிச்சை அளிப்பதற்காகவும் கடந்த 1997ஆம் ஆண்டில் இருந்து ஹெலிகொப்டர் அம்புலன்ஸ்கள் இயக்கப்படுகின்றன.

அவ்வகையில், நேற்று முன்தினம் மாரடைப்பால் பாதிக்கப்பட்ட சுமார் 76 வயது முதியவரை ஏற்றிவந்து போர்ட்டோ நகரில் உள்ள வைத்தியசாலையில் அனும...



## சீக்கிய கலவரம்

## சஜ்ஜன் குமாருக்கு ஆயுள் தண்டனை

(டில்லி)

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட போது, நாடு முழுவதும் வெடித்த கலவரம் தொடர்பான வழக்கில் டில்லி முன்னாள் காங்கிரஸ் தலைவர் சஜ்ஜன் குமாருக்கு நேற்று திங்கட்கிழமை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி, கடந்த 31.10.1984ஆம் ஆண்டு டில்லியில் உள்ள தனது வீட்டில் சீக்கிய பாதுகாவலர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்த படுகொலைக்குப் பிறகு சீக்கியர்களுக்கு எதிராக நாடு முழுவதும் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு, கலவரம் வெடித்தன. இதில் 2800 சீக்கியர்கள் உயிரிழந்தனர். டில்லியில் மட்டும் சுமார் 2100 சீக்கியர்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர்.

குறித்த கலவரம் தொடர்பாக டில்லி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைகள் நடைபெற்று வந்தன. இந்த வழக்கின் போது, ஒருவருக்கு மரண தண்டனையும், மற்றுமொரு நபருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலும், முன்னாள் காங்கிரஸ் தலைவர் சஜ்ஜன் குமாருக்கு எதிரான மேன்முறையீட்டு வழக்கு டில்லி உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், நேற்று இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய டில்லி உயர் நீதிமன்றம், சீக்கியர்கள் கலவர வழக்கில் சஜ்ஜன் குமார் குற்றவாளி என அறிவித்து அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மேலும், எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் சஜ்ஜன் குமார் சரண் அடைய வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (4-7)

## அமெரிக்காவின் பொருளா... அணுவாயுத அழிப்...

### வடகொரியா தி...

(பியாங்யாங்)

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளால் அணுஆயுத அழிப்பு நிறுத்தப்படும் சூழல் ஏற்படும் என வடகொரியா மிரட்டியுள்ளது.

இதுகுறித்து வடகொரியா தரப்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், "வடகொரியா வுடனான உறவில் நட்புறவை பேணுவதில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எடுக்கும் முயற்சிகள் பாராட்டக்கூடியவை. ஆனால் வடகொரிய அதிகாரிகள் மீது அமெரிக்கா தொடர்ந்து கடந்த சில ஆண்டுகளாகவே பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறது.

இதன் மூலம் அணுஆயுதம் உற்பத்தி செய்வதை வடகொரியா கைவிடும் என்று அமெரிக்கா நினைத்தால் இது அமெரிக்காவின் தவறான கணிப்பாகும். மேலும் இது எங்களுடைய அணுஆயுதங்களை அழிப்பிற்கான பாதைக்கு நிரந்தர தடையை ஏற்படுத்தும்" என்று தெரிவித்துள்ளது.


மனித உரிமை மீறல் தொடர்பாக வடகொரியாவின் மூன்று அதிகாரிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதாக அமெரிக்கா கூறியிருந்தது. பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட வடகொரிய அதிகாரிகளில் அந்நாட்டு ஜனாதிபதி கிம்முக்கு நெருக்கமானவரான சோ ராயிங் ஹேறவும் ஒருவர்.

முன்னதாக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22 ஏவுகணை சோதனைகளை நடத்தியது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்...

# வெளிநாடு

## ...தப்புக்குள் தாக்குதல்

## ...ன் மரணதண்டனையை ...றுவத்தளபதி உத்தரவு



படி மேற்கண்ட பயங்கரவாதிகள் 15 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதிப்படுத்தி இராணுவத் தளபதி காமர் ஜாவெத் பாஜ்வா நேற்று முன்தினம் உத்தரவிட்டார். (4-7)

## ஊழல் வழக்கில் சிக்கிய மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் 65 இலட்சம் டொலர் முடக்கம்

(மாலே)

அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி தேர்தல் செலவுக்காக பணம் திரட்டிய ஊழல் வழக்கில் சிக்கிய மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனின் பணம் 65 இலட்சம் டொலர்கள் முடக்கப்பட்டது.

இந்திய பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள மாலைதீவில் கடந்த செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடைபெற்றது.

மாலைதீவு முன்னேற்றக் கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி அப்துல்லா யாமீன், எதிர்க் கட்சியான மாலைதீவு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது சோலியிடம் தோல்வியடைந்தார்.

58.4 சதவீதம் வாக்குகளைப் பெற்ற முஹம்மது சோலிஹ் வெற்றிபெற்றதாக தேர்தல் கமிஷன் அறிவித்தது. இதனால், மாலை தீவின் புதிய ஜனாதிபதியாக இப்ராகிம் முகமது சோலிஹ் பதவி ஏற்றார்.



இதற்கிடையில், தனது பதவி, அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி தேர்தல் செலவுகளுக்கு நிதி திரட்டியதாக முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு எதிராக குற்றச்சாட்டு எழுந்தது.

இவ்விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில், அப்துல்லா யாமீனுக்கு சொந்தமான வங்கிக் கணக்கில் உள்ள சுமார் 65 இலட்சம் டொலர்கள் மதிப்பிலான பணத்தை பொலிஸார் முடக்கி வைத்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-7)

## ...ம்புலன்ஸ் விபத்து ... உட்பட 4 பேர் பலி



...தித்துவிட்டு, பிராகான்க்கா மாவட்டத்தை நோக்கி நேற்று முன்தினம் இரவு திரும்பிச்சென்ற ஒரு ஹெலிகொப்டர் அம்புலன்ஸ் சிறிது நேரத்தில் தரையில் உள்ள கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது.

இந்நிலையில், மலைகள் சூழ்ந்த சால்ட்டோ என்னுமிடத்தில் அந்த ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கி கிடந்தது. அதில் இருந்த இரு விமானிகள், ஒரு வைத்தியர் மற்றும் துணை மருத்துவர் உட்பட 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து நேர்ந்திருக்கலாம் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. (4-7)

## ஜமால் கஷோக்கி கொலை விவகாரம்

## இளவரசர் மீது கொலைப்பழி சுமத்திய அமெரிக்காவுக்கு சவுதி அரசு கண்டனம்



(ரியாத்)

துருக்கி நாட்டில் ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொல்லப்பட்டதற்கு சவுதி இளவரசருக்கு தொடர்பு இருப்பதாக அமெரிக்க பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு சவுதி அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

துருக்கி நாட்டின் தலைநகரான இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபியா நாட்டுத் தூதரகத்தில் பத்திரிகையாளர் ஜமால் கஷோக்கி கொல்லப்பட்டதற்கு சவுதி இளவரசர் முஹம்மது பின் சல்மானுக்கு தொடர்பு இருப்பதாக அமெரிக்க பாராளுமன்றம் கடந்த வியாழக்கிழமை தீர்மானம் நிறைவேற்றியது.

மேலும், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்து சவுதி அரேபியா போர் ஆயுதங்கள் கொள்முதல் செய்வதையும் எதிர்த்து அமெரிக்கா அந்த தீர்மானத்தில் கருத்து தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொலையில் சவுதி இளவரசருக்கு தொடர்பு இருப்பதாக அமெரிக்க பாராளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு சவுதி அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

"சவுதி அரேபியா நாட்டின் இறையாண்மையை அவமதிக்கும் வகையிலும், வளைகுடா பிராந்தியம் மற்றும் சர்வதேச அளவில் சவுதி அரேபியாவுக்கு இருக்கும் பங்களிப்பை குறைத்து மதிப்பிடும் வகையிலும், போதிய ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை மட்டுமே அடிப்படையாக வைத்து அமெரிக்க பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை சவுதி அரேபியா அரசு நிராகரிக்கிறது.

மேலும், எங்கள் நாட்டின் தலைவரை அவமதிக்கும் வகையிலும், உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யும் விதமாகவும் சுமத்தப்படும் எவ்விதமான - அனைத்து விதமான குற்றச்சாட்டுகளையும் எங்கள் அரசு புறக்கணிக்கிறது' என சவுதி அரேபியா அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## ...ளாதாரத் தடைகளால் ...ப்பு நிறுத்தப்படும்

### ...திடீர் மிரட்டல்



...பான் கடலுக்கு அருகில் நடத்தப்பட்டன. வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வந்தன.

ஆனால், எதிர்ப்புகளைச் சற்றும் பொருட்படுத்தாமல் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத ஏவுகணை சோதனைகளை நடத்தி வந்தது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தலைமையில் வடகொரியாவின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

எனினும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளைப் பொருட்படுத்தாமல் வடகொரியா அவ்வப்போது ஏவுகணை சோதனைகளை நடத்தி வந்தது. இந்த நிலையில் தென் கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா பங்கேற்றது. அது முதல் வடகொரியா -தென் கொரியா உறவில் இணக்கம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து ட்ரம்ப் - கிம் இடையே சிங்கப்பூரில் சந்திப்பு ஏற்பட்டது.

இந்தச் சந்திப்பில் அணு ஆயுதங்களை அழிக்க வடகொரியா சம்மதம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## விடுதியில் வெடி விபத்து; 42 பேர் படுகாயம்



(சப்போரோ)

ஜப்பானின் சப்போரோ நகரில் உள்ள விடுதி ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 42இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.


ஜப்பானின் சப்போரோ நகரில் உள்ள உணவு விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு திடீர் வெடி விபத்து ஏற்பட்டது. வெடி விபத்தைத் தொடர்ந்து அந்த விடுதிக்கு அருகில் இருந்த ஒரு கட்டடமும் இடிந்து விழுந்ததாக தகவல் வெளியாகி இருக்கிறது.

வெடிப்பைத் தொடர்ந்து எரிவாயு கசிந்த வாசனையும் உணரப்பட்டதாக காயமடைந்தவர்கள் தெரிவித்தனர். விபத்து குறித்த தகவலறிந்து, 20 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வண்டிகளில் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்தத் தீ விபத்தில் 40-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இரண்டுக்கும் மேற்பட்டோர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்பிருப்பதாகவும் சப்போரோ நகர தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து குறித்து சப்போரோ நகர பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# புதிய அமைச்சரவையில் சூழ்ச்சிக்காரர்களுக்கு இடமளிக்கமாட்டோம்

## ஐ.தே.முன்னணி திட்டவட்டம்



(கொழும்பு)

இருவேறுபட்ட கருத்துக்கள் இல்லாத ஒரே கொள்கையுடைய ஐக்கிய தேசிய முன்னணியின் தனி அரசாங்கமே உருவாக்கப்படும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்கிரமரத்ன, 30 அமைச்சுக்கள் மாத்திரமே கொண்டு உருவாக்கப்படும் புதிய அமைச்சரவையில் சூழ்ச்சிக்காரர்களுக்கு இனிமேல் இடமில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அமைச்சரவைக்கென ஒழுங்குமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வாகனங்கள், வெளிநாட்டு பயணத்துக்கான சலுகைகள் அனைத்தும் கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியேற்றதன் பின்னர் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சமாதானத்தை குழப்பும் சக்திகளே படுகொலைகளில் ஈடுபடுகின்றன!

## கண்டனப் போராட்டம் தொடர்கிறது



(ஏறாவூர்)

சமாதானத்தை குழப்புகின்ற சக்திகளே படுகொலைக் கலாசாரத்தில் ஈடுபடுகின்றனர் என மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் பொலிஸாரின் படுகொலைகளைக் கண்டித்து நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற துண்டுப் பிரசுர விநியோகத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சிவில் பிரஜைகள் சபையின் **Batticaloa District Civil Citizen Council** தலைவர் ரீ.திருநாவுக்கரசு தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் போராட்டமும் துண்டுப் பிரசுர விநியோகமும் இடம்பெற்றது.

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"சாந்தியும் சமாதானமும் எமது தேவை.

நாட்டில் யுத்த அவலநிலையும் சோதனைச் சாவடிகளின் அசௌகரியங்களும் இல்லாமல் செய்யப்பட்டு யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட கொலைகள் காயங்கள், அங்கவீனங்கள் இல்லாமல் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இச்சமாதான சூழ்நிலையைக் குழப்புகின்ற தரப்பினர் மக்களின் நிம்மதியை குழப்பி அதன் மூலம் இலாபம் அடைய நினைக்கின்றனர்.

படுகொலைகளைச்செய்து மக்களுக்குப் பயத்தை ஏற்படுத்தி மீண்டும் சோதனைக்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை எமது சிவில் சமூகம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

நாட்டில் என்றும் சமாதானம் நிலவி சிறுபான்மையினர் அவர்களது உரிமைகளைப் பெற்று ஜனநாயக வழிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதே எமது அமைப்பின் நோக்கங்களில் ஒன்றாகும்.

வவுணதீவில் படுகொலை செய்யப்பட்ட இரண்டு பொலிஸாரில் ஒருவர் சிங்களவர். மற்றையவர் தமிழர்.

இவர்கள் அரசாங்கத்தால் நீதியை நிலைநாட்டுவதற்காக நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே வவுணதீவிற்கு வந்தவர்கள். சமாதானத்தை குழப்புகின்ற சக்திகள் அவர்களைப் படுகொலை செய்தன. அவர்கள் தமது உயிரை இத்தேசத்திற்காக அர்ப்பணித்துள்ளனர்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை செய்பவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அரச உத்தியோகத்தர் மற்றும் அரச இயந்திரம் முடக்கப்பட்டு இன முறுகலை ஏற்படுத்துவதற்காக சிலர் முனைகின்றனர்.

பல்லினமாக வாழ்வதே எமது பலம் எனக் கருதி நாம் என்றும் சமாதானமாக சாந்தியுடன் வாழ வேண்டும்.

நாட்டில் எப்பிரச்சினைகள் வந்தாலும் சமாதானமாக கலந்துரையாடி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்புடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

சமாதானத்தாலும் அகிம்சை வழியால் தான் எமது மூதாதையர்கள் பல விடயங்களை எமது சமூகத்துக்கு வென்று தந்துள்ளார்கள் என்ற உண்மையை உலகமும் அறியும் நாமும் அறிவோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# நாம் புதிய அரசை அமைத்தது வெற்றியில்லை கட்டாயமாக தேர்தலுக்கு தயாராக வேண்டும்

## நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வாய்ப்பு கிடைத்தமை வெற்றியில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் தேர்தலுக்குத் தயாராக வேண்டியது கட்டாயம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சியமைத்ததில் இருந்து தேர்தலுக்குத் தயாராக வேண்டும் எனவும் அரசியல் பலத்தைப் பெற்று இளைப்பாற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு பிரச்சினைக்கும் முகங்கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நீண்ட ஆயுள்

ஒரு நாள் தற்கொலையைப் பற்றி சில விபரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தோம்! அதைக் கேட்டுவிட்டு ரொம்ப வேகமாக ஒருத்தர் வந்தார். அவர் வந்த வேகத்தைப் பார்த்தால் எனக்கும் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது... அவ்வளவு வேகமாக வந்தார். அந்தத் தகவலைக் கேட்டு விட்டு "சேர் எந்த முடிவுக்கு வந்தாரோ தெரியலையே" என்று தலையைப்பிச்சிக்க வேண்டும்போல இருந்தது எனக்கு!

நியமா அது முடியாத காரியம் என்பதனாலே பேசாமல் இருந்தேன். வந்தவர் சொன்னார், "சேர்! தற்கொலை செய்து கொண்டு அரைகுறை வயதில் செத்து போகிறவர்களைப் பற்றிக் காலை நேரத்தில் எதற்கு சேர் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்... அதைவிட தீர்க்காயுசாக ரொம்ப நாள் சௌக்கியமாக வாழ்பவர்களைப் பற்றி ஏதாவது விபரம் இருந்தால் சொல்லக்கூடாதா? என்றார்.

சொல்லவில்லை என்றால் விடமாட்டார் போல இருந்தது... உடனே தேட ஆரம்பித்ததும் சில விபரங்கள் கிடைத்தன. உலகத்திலேயே அதிக காலம் உயிரோடு வாழ்ந்த மனிதன் யார்?

ஆதார பூர்வமாகக் கிடைத்த தகவல் படி அவர் ஒரு ஜப்பான்காரர். அவர் பெயர் சிக்ஷியோ இசுமி. இவர் 1986 பெப்ரவரி 21 இல் தான் இறந்து போனார். அந்த சமயத்தில் இவருக்கு வயது 120 வருடம் 237 நாட்கள்! ஜப்பானில் உள்ள ரொம்பவும் பின்தங்கிய தீவு ஒன்றில் பிறந்து வளர்ந்தவர். கடுமையான உழைப்பாளியாம். வயசான காலத்திலேயும் உடற்பயிற்சி செய்வாராம். மீன்–காய்கறி இது எல்லாம் நிறையச் சாப்பிடுவாராம். மற்ற மாமிசம் எல்லாம் குறைவாத்தான் சாப்பிடுவாராம். சோவியத் யூனியனில் இது சம்பந்தமான சில ஆய்வு எல்லாம் நடந்தது. அங்கே 1960 களில் பெண்களுடைய சராசரி வயது 73.6, ஆண்கள் 64.5.

1972 இல் பார்த்தால் இது படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்திருக்கிறது! அப்போது பெண்கள் சராசரி வயது 72.6, ஆண்கள் 62.4. அப்படி என்றால் இப்போது இன் னும் குறைஞ்சிருக்கும் என்று தானே நினைக்கிறீர்கள். அதுதான் இல்லை! இப்போது அங்கே பெண்களுடைய சராசரி வயது 73.6, ஆண்களுடைய சராசரி வயது 65. இது எப்படி சாத்தியமாகியது என்று நினைக்கிறீர்கள்? மதுபானங்களுக்கு எதிரான பிரசாரம் தான் காரணம். மதுபான உபயோகம் குறையக் குறைய வயது கூடிக் கொண்டே வந்தது. அது மட்டுமில்லை வீதி விபத்துகளும் 37 சதவீதம் குறைந்து விட்டதாம். பொதுவாக உலகத்திலேயே அதிக வயதானவர்கள் இருக்கும் நாடுகள் இரண்டு. ஸ்கண்டி நேவியா–ஜப்பான்.

ஆனால் சோவியத் யூனியன் ஆய்வாளர் "கோஸ்லோவ்" என்ன சொல்கிறார் என்றால்... அவர் பார்த்த வரைக்கும் காகசஸ் மலைப்பகுதியிலே இருப்பவர்கள் தான் அதிக நாட்கள் வாழ்கிறார்கள் என்று சொல்கிறார். அந்தப்பகுதியிலே இருப்பவர்களுடைய அதிக பட்சம் வயது 150! அங்கே இருப்பவர்கள் மட்டும் அதிக நாள் வாழ்வதற்கு என்ன காரணம்? "கோஸ்லோவ்" என்ன சொல்கிறார் என்றால்... பொதுவாக மலைப்பகுதியில் உயிரினங்களுடைய வளர்ச்சி கொஞ்சம் மெதுவாகத்தான் நடக்குமாம்! அதைத் தவிர அங்கே இருக்கும் இயற்கை சூழ்நிலை, நல்ல காய்கறிகள், தயிர் எல்லாம் தான் இதற்குக் காரணம்.

இன்னொரு முக்கிய காரணமும் அவர் ஆய்விலேயிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது! தனி மனிதன் நன்றாக நடந்து கொண்டால் மட்டும் போதாதாம். சமூகமே நல்ல நெறியில் நடந்து கொள்வதும் ஒரு காரணமாம். அந்த ஊரில் வயதானவர்களுக்கு சின்னவர்கள் மரியாதை கொடுக்கிறார்களாம். கிழடு எப்ப மண்டையைப்போடும் என்று முணுமுணுப்பது இல்லை. வேண்டிய உதவிகளைப் செய்கிறார்களாம்.

இதனால் அங்கே எல்லாருக்கும் மன இறுக்கம் குறையுதாம்! ஒருத்தர் வீட்டில் ஒரு துக்கம் என்றால் அதை அந்த ஊரில் எல்லோரும் வந்து பகிர்ந்து கொள்வார்களாம்! அதனால் சோகம் சிதைந்து போகிறது... பொறாமை வருவதற்கும் வாய்ப்பு இல்லை! பெரியவர்கள் அனுபவ முதிர்ச்சியால் சரியான வழியைக் காட்டுகிறார்கள்... இளைய தலைமுறை அந்த வழியில் போவது என்றாலே கஷ்டங்கள் வருவது இல்லை!

பெரியவர்கள் பேச்சை கேள் என்று சொல்வது எதற்காக? பிரச்சினைகளுக்கு முடிவெடுப்பது அவர்களுக்குச் சுலபம். ஏன் என்றால் அவர்களுக்கு அனுபவம் இருக்கு... அவர்கள் சொல்லும்படி போனால் இளைஞர்களுக்குக் கஷ்டம் இல்லை!, ரென்ஷன் இல்லை! பெரியவர்களுக்கும் தங்களை யாரும் மதிக்கவில்லை என்னும் கவலையும் இல்லை! அதனால் இரண்டு தலைமுறையும் நீண்ட ஆயுளோடு வாழ முடியும்.

இது எல்லாம் வெறும் உபதேசம் என்று யாரும் நினைத்து விடாதீர்கள். ஆராய்ச்சியினுடைய முடிவுகள். நீண்ட நாள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு விஞ்ஞானிகள் சில நல்ல யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள்.

காற்றோட்டமான இடத்தில் இருங்கள், முடிந்தால் திறந்த வெளியில் தூங்குங்கள், மூச்சை ஆழ்ந்து இழுத்து விடுங்கள்!, அளவோட சாப்பிடுங்கள்...!, இறைச்சி, மசாலாப் பொருட்களைக் குறைத்துக்கொள்ளுங்கள்!, உணவை நல்லா மென்று சாப்பிடுங்கள்!, முழுங்க வேண்டாம்!, வயிற்றில் எதுவும் தங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்!, நிக்கும்போது–உக்காரும்போது–நடக்கும்போது முதுகெலும்பு வளையாமல் நேராக இருக்க வேண்டும். தினமும் பல் துலக்கி பல் ஈறு எல்லாம் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்!, அளவுக்கு மீறி வேலை செய்யக்கூடாது, தினம் 7 மணி நேரமாவது தூங்குங்கள்!, கோபம், கவலை இது இரண்டையும் முடிந்த அளவு குறைத்துக்கொள்ளுங்கள்! இது தான் விஞ்ஞானிகள் சொல்லும் யோசனைகள்!

கதை ஒன்று கேள்விப்பட்டிருப்பீர்கள்! ஒரு பெரியவருக்கு நூறாவது பிறந்த நாள் விழா நடந்ததாம். விழாவுக்கு வந்தவர்கள் எல்லாம் அவர் நூறு வயது வாழ்வதற்கு என்ன காரணம் என்று கேட்டார்களாம்! அதற்கு அவர் "நான் புகைப் பிடிப்பதில்லை, மது அருந்துவதில்லை, மாமிசம் சாப்பிடுவதில்லை அது தான் காரணம்!" என்றார். இப்படி அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே "தடால்" என்று ஒரு சத்தம் மாடியில்! "என்ன சத்தம் அது?" என்று கேட்டார்களாம்! அதற்கு அந்தப் பெரியவர் "ஒன்றுமில்லை! மாடியில் இருப்பது என்னுடைய அப்பா தான்! எப்ப பார்த்தாலும் தண்ணி போட்டுக்கொண்டு ஆடிக்கொண்டே இருப்பார்! அவருக்கு எல்லாக் கெட்ட பழக்கமும் உண்டு" என்றாராம்!

சும்மா தமாசுக்காக சொல்லப்பட்ட கதை இது! இதை சீரியசாக எடுத்துக் கொண்டு அந்த வழியிலேயே எல்லாரும் கெட்டுப் போக ஆரம்பித்துவிடாதீர்கள்!



# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2018-14.01.2019

துலாம் இராசி வாசகர்களே, விளம்பி வருட மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். விரயாதிபதி புதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே விரயத்திற்கேற்ற பணம் உங்களுக்கு வந்து கொண்டே இருக்கும். எந்தவொரு புது முயற்சியில் ஈடுபட்டாலும் காரியத்தைத் தொடங்கும் முன் ஒரு கணம் யோசிப்பது நல்லது. பையில் பணம் இல்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. காரியத்தைத் தொடங்கிவிட்டால் பணம் தானாகவே வந்து சேரும். உதவிக்கரம் நீட்ட நண்பர்கள் முன் வருவர். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மனதிற்கு சந்தோஷம் தரும் தகவல் வந்து கொண்டே இருக்கும். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றிவிடுவீர்கள். செய்யும் தொழில் சிறப்பாக இருந்தாலும் கூட புதிய தொழில் தொடங்க வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். அதற்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். குருபகவான் 2இல் இருப்பதால் புதிய ஒப்பந்தங்களும், வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும். பணி புரியும் இடத்தில் சக பணியாளர்களிடம் ஏற்பட்ட பிரச்சினை அகலும். அரசு வேலைக்காக விண்ணப்பித்திருப்பவர்களுக்கு அது கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

உங்கள் இராசிக்கு 3ஆம் இடத்தில் சனி, சூரிய சேர்க்கை இருக்கின்றது. வலிமை குறைந்த சனியாக இருந்தாலும் கூட வழக்குகளும், வாய்தாக்களும் வந்து கொண்டே இருக்கும். கூடப்பிறந்தவர்களில் ஒருசிலர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ளமாட்டார்கள். தொழிலில் பங்குதாரர்களாக உடன்பிறப்புகளை சேர்த்துக் கொண்டிருப்பவர்கள் மனக்கவலைக்கு ஆளாக நேரிடும். நாங்கள் விலகிக் கொள்கிறோம், நீங்களே தொழிலைத் தொடர்ந்து நடத்துங்கள் என்று அச்சுறுத்திக் கொண்டே இருப்பர். என்ன இருந்தாலும் செயல் ஸ்தானத்தில் ராகு பலம் பெற்றிருப்பதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும் என்றே சொல்லலாம். வியாபார ரீதியாக அடிக்கடி வெளியூர் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்புகளும் உருவாகும். இம்மாதம் கண்ணபிரான் வழிபாடு உங்கள் கவலைகளைத் தீர்க்கும். மேலும் இறைவன் தரிசனம் கொடுக்கும் ஆருத்ரா தரிசன நாள் இம் மாதம் வருவதால், அன்றைய தினம் நடராஜப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. ஆடலரசன் வழிபாடு ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும்.

### மீனச் செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், மாதம் தொடங்கும் பொழுது பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே பிள்ளைகளால் பெருமை சேரும். பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். குறிப்பாக பூர்வீக சொத்துக்கள் பிரச்சினை அகலும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். பிள்ளைகள் வேலைவாய்ப்பைக் கருதி தேர்வு எழுதியிருந்தால் அதில் வேலை கிடைக்கும். உறவினர்களோடு ஏற்பட்ட வழக்குகளில் சமரச உடன்பாடு பிறக்கும். டிசெம்பர் 17ஆம் திகதி மீன இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். மீன இராசி உங்கள் இராசிக்கு 6ஆம் இடம் ஆகும். எதிர்ப்பு, வியாதி, கடன் என்பதைக் குறிக்கும் இடம் ஆறாமிடமாகும். அந்த இடத்திற்குத் தனாதிபதி செவ்வாய் வரும்பொழுது பழைய கடன்கள் பைசல் ஆகலாம். புதிய கடன் வாங்கித் தொழில்




வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம்.

### தனுசு இராசியில் புதனின் சஞ்சாரம்

டிசெம்பர் 29ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது புத ஆதித்ய யோகம் ஏற்படுகின்றது. எனவே கல்வி வளர்ச்சியில் இருந்த தடை அகலும். தந்தை வழியில் ஏற்பட்ட விரிசல் விலகும். பெற்றோர்களின் பாச மழையில் நனைவீர்கள். இடமாற்றங்கள் இனிமை தருவதாக அமையும். உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். மனக்குழப்பங்கள் அகல மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பகைவர்களின் பலம் குறையும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த காரியம் ஒன்று இப்பொழுது துரிதமாக நடைபெறும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு கௌரவப்பதவி தேடிவரலாம்.

### விருச்சிக இராசியில் சுக்கிரனின் சஞ்சாரம்

ஜனவரி முதல் திகதி விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் தன ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது தனவரவு தாராளமாக வந்து சேரும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குருவோடு சுக்கிரன் இணைவதால் எதிர்பாராத பல திருப்பங்களை நீங்கள் சந்திக்க நேரிடும். குறிப்பாக குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு அல்லது மழலையின் ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகும். தங்கு தடைகள் தானாக அகலும். இந்த நேரத்தில் வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழலாம். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்பை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பொதுவாக இது போன்ற காலங்களில் கட்டிய வீட்டைப் பராமரிக்கும் யோகம் உண்டு. சொத்துக்கள் வாங்கும் யோகம் ஏற்படும். இம் மாதம் வெள்ளிக் கிழமை தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வருவது நல்லது.



### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் இராசிநாதன் பலம்பெற்று விளங்குவதால் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். மனதளவில் செய்ய நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். பொருளாதார மேன்மை உண்டு. கணவன்-மனைவி இடையே பாசமும், நேசமும் அதிகரிக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பது மட்டுமல்ல, அவர்களால் உங்களுக்கு உதிரி வருமானங்களும் வந்துசேரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். கடன் சுமை குறையும். பணிபுரியும் பெண்களுக்கு பலநாட்களாக எதிர்பார்த்த பதவி வாய்ப்புக் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களும் வரலாம். ஆதியந்தப்பிரபு வழிபாடு ஆனந்தம் வழங்கும். திருவாதிரையன்று நடராஜர் வழிபாடு நன்மை தரும். ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

## விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் யோகம்!






விருச்சிக இராசி வாசகர்களே, விளம்பி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கின்றார். இராசியிலேயே தன பஞ்சமாதிபதியான குருவும், இலாபாதிபதியான புதனும் இணைந்து இருக்கின்றார்கள்.

எனவே வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். தெய்வீகச் சிந்தனை அதிகரிக்கும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்குப் பல வழிகளிலும் ஆதரவு கிடைக்கும். உள்ளம் மகிழும் விதம் ஒப்பந்தங்களும் அடுக்கடுக்காக வந்து கொண்டேயிருக்கும்.

உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் சொந்த வீட்டில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். அவரது பார்வை 6ஆம் இடத்தில் பதிவாகின்றது. எனவே மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். வாகன யோகம் முதல் அனைத்து யோகங்களும் ஏற்பட்டு வளர்ச்சியின் எல்லைக்குச் செல்வீர்கள். உத்தியோகத்திற்காகப் புது முயற்சிகள் செய்தவர்களுக்கு அது கைகூடும். பணி நிரந்தரமாகவில்லையே என்று நினைத்தவர்களுக்குப் பணி நிரந்தரமாவதோடு மட்டுமல்லாமல் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை வருவதில் இருந்த தடைகள் அகலும். உற்சாகத்தோடும், தெம்போடும் பணிபுரிவீர்கள்.

சக பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகிச் சமாதானக் கொடி பறக்கும். உங்கள் திறமை பளிச்சிடும். மேலதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டு வியந்து, எதிர்பார்த்த சலுகைகளை எளிதில் தர முன்வருவார்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. தொழில் ஸ்தானாதிபதி சூரியன் தன ஸ்தானத்தில் இருப்பதால் தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். வங்கிகளின் ஒத்துழைப்பும், வள்ளல்களின் ஒத்துழைப்பும் கிடைத்துத் தொழிலை விரிவுசெய்ய முன்வருவீர்கள். செவ்வாய் பலம் பெற்றிருப்பதால் சொத்துக்கள் வாங்கும் யோகமும் உண்டு. கட்டடப் பணிகள் தொடரும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறத் தெய்வ அருள் உங்களுக்குத் துணைபுரியும்.

இம்மாதம் இறைவன் காட்சிதரும் ஆருத்ரா தரிசன நாள் வரும் மாதம் என்பதால் அன்றைய தினம் நடராஜப்பெருமான் சந்நிதி யில் சிவபுராணம் பாடி வழிபடுவது நல்லது. மேலும் ஏழரைச் சனியில் குடும்பச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் சனிக்கிழமை தோறும் ஆனைமுகத்தோன் வழிபாடும், அனுமன் வழிபாடும் முறையாகச் செய்வதன் மூலம் முன்னேற்றத்தின் முதற்படிக்குச் செல்ல இயலும்.

### மீன செவ்வாயின் சஞ்சாரம்

டிசெம்பர் 17ஆம் திகதி மீன இராசிக்குச் செவ்வாய் செல்கின்றர். அப்பொழுது உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை அதன்மீது பதிகின்றது. எனவே குரு மங்கள யோகம் ஏற்படுகின்றது. இதுபோன்ற காலத்தில் குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். உறவினர்களின் இல்லங்களில் நடைபெறும் சுபகாரியங்களையும் முன்னின்று நடத்தி வைப்பீர்கள். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும் கூடுதலாகக் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி வைப்பு நிதி வைப்பது, கல்யாணச் சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவது போன்றவற்றிலும் கவனம் செலுத்துவீர்கள்.




### தனுசு புதனின் சஞ்சாரம்

புதன் உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் டிசெம்பர் 29ஆம் திகதி தன ஸ்தானத்திற்கு வரும் பொழுது எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வருவதோடு, தொழிலிலும் மிகுந்த வளர்ச்சி ஏற்படும். இருமடங்கு இலாபம் கிடைத்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகள் ஆச்சரியப்பட வைக்கும். பணிபுரியும் இடத்திலேயே உங்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. புதிய தொழில் தொடங்கும் திட்டங் களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். கௌரவம், அந்தஸ்து உயரும். சேமிப்பு அதிகரிக்கும் இந்த நேரத்தில் எதைச் செய்தால் எளிதில் நன்மை கிடைக்கும் என்ற சிந்தனை மேலோங்கும்.

### விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி முதல் திகதி உங்கள் இராசிக்கு வருகின்றார். எனவே சுபவிரயங்கள் அதிகரிக்கும். பெற்றோர்களின் மணி விழா, முத்து விழா, பவள விழா போன்ற விழாக்களும், கட்டடத் திறப்பு விழா, கடைதிறப்பு விழாக்களும், பெண்களின் சுபச்சடங்குகளும் நடைபெறும் அமைப்பு உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். இடமாற்றம், வீடு மாற்றம் போன்ற மாற்றங்கள் இனிய மாற்றங்களாக அமையும். இம் மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வதும், பௌர்ணமி நாளில் மலை வலம் வருவதும் நன்மை தரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் இனிய மாதமாகும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். பொருளாதார வசதி பெருகும். பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்ப்பீர்கள். மனதில் இருக்கும் இனம்புரியாத கவலை மாறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். அவர்களால் உதிரி வருமானங்கள் உண்டு. சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினரின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட இடத்திற்கு மாறுதலும், நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் இப்பொழுது வந்து சேரலாம். பிரதோஷ வழிபாடு பெருமை தரும். வீடு வாங்கும் முயற்சி அல்லது கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

## வெற்றிகள் குவியும்

(தொடரும்...)






சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் பழ மரக் கன்றுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடப்பட்டன. விவசாய அமைச்சின் அனுசரணையில் இலங்கை -ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான தென்மராட்சி இளைஞர் சபையின் ஊடக ஒருங்கிணைப்பாளர் த.சுபேசனின் ஏற்பாட்டில் பழ மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தயாளினி மகேந்திரன், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை -ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் தென்மராட்சி பிரதேச உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.(படங்கள்:-சுபேசன்)




# மட்டக்களப்பில் ஊருக்குள் புகுந்த கடல்

## பதறியடித்து ஓடிய மக்கள்







(நாவலடி)

மட்டக்களப்பு நாவலடி கடற்கரைப் பகுதிகளில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் கடல் நீர் ஊருக்குள் புகுந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு நாவலடி கிராமத்திற்குள் திடீரென கடல் நீர் உட்புகுந்ததால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சுனாமி அலைகள் போன்று கடல் அலைகள் ஊருக்குள் புகுந்ததால் சுனாமி வரப்போகிறது என்ற பீதியில் மக்கள் பதறியடித்து ஓடியதாகவும் தெரிய வருகின்றது. (இ-7)

# சுவர்க்கவாசல் ஏகாதசி பூஜை

(யாழ்ப்பாணம்)

வண்ணை வெங்கடேஸ்வரர் ஆலய சுவர்க்கவாசல் ஏகாதசிப் பூஜை இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணிக்கு சுக்கிரபாதத்துடன் ஆரம்பமாகி காலை 6 மணிக்கு சுவர்க்கவாசல் தரிசனம் இடம் பெறும்.

இதேவேளை காலை 9 மணிக்கு மூலவர் அபிஷேகம் இடம்பெற்று வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து ஆதி வெங்கடேஸ்வரர் வீதி உலா வருவார். (இ-9-136)



சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைத்துள்ள புனித லிகோரியார் தேவாலய இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் கடந்த 15 ஆம் திகதி இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. லிகோரியார் ஆலய மண்டபத்தில் இடம் பெற்ற இவ் இரத்ததான நிகழ்வில் அதிகளவான இளைஞர். யுவதிகள் இரத்ததானம் வழங்கினர். (படம்:- சுபேசன்)

# நாடாளுமன்றக் குழப்பம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்விடம்



நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற குழப்ப நிலை தொடர்பில் விசாரணை செய்ய குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை, மிளகாய்த் தூள் வீசப்பட்டமை, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தற்போது பலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அத்துடன் சபாநாயகர் கரு ஜெயசூரியவின் கையொப்பத்துடன் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட கடிதம் தொடர்பில் விசாரணைக்ள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7)

# வரணி மாசேரி - நாவலடிப் பிள்ளையார் வீதி எப்போது புனரமைக்கப்படும்-மக்கள் கேள்வி



(வரணி)

மக்களின் போக்குவரத்திற்கு வீதிகள் மிகவும் முக்கியமானவை. அந்த வகையில் வரணி மாசேரியில் அமைந்துள்ள நாவலடிப் பிள்ளையார் வீதியானது மிகவும் மோசமான முறையில் சேதமடைந்துள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்டுள்ள இந்த வீதியானது சுமார் 3 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டதாகும். மழைக் காலங்களில் நீர் தேங்கி வீதிக்கு மேலாக ஒரு அடி வரை காணப்படும்.

அதுமட்டுமன்றி ஏற்றமும் இறக்குமுமாகவும் காணப்படுகின்றது. மிக நீண்ட வருடங்களாக இவ் வீதிப்புனரமைப்பின்றிக் காணப்படுகின்றது.

பலமுறை உரிய தரப்பினரிடமும் அதிகாரிகளிடமும் அரசியல்வாதிகளிடமும் முறையிட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

இவ்வீதி சேதமடைந்துள்ளமையால் வீதியால் பயணிக்கும் மாணவர்கள் வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் போன்றோர் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

ஆகவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# வரவு-செலவுத் திட்டத்தின் முழுமையான விபரம் இல்லை

### மக்கள் விசனம்; உறுப்பினர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் மீது எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறுதி வாக்கெடுப்பு இடம் பெறவிருக்கும் நிலையில் குறித்த வரவு- செலவுத் திட்டத்தின் முழுமையான விபரம் பொதுமக்கள் பார்வைக்கு விடப்படவில்லையென மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

11 வட்டாரங்களை உள்ளடக்கிய 18 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி நகர சபையின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விசேட கூட்டம் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற நிலையில் கடந்த 12 ஆம் திகதி வரவு-செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டதாகவும் அதில் முழுமையான விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை என பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக நகர சபை உறுப்பினர்கள் சிலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது தாமும் தவிசாளரிடம் கேட்டதாகவும் தமக்கும் முழுமையான விபரம் இன்னும் கிடைக்கவில்லை என கவலையுடன் தெரிவித்தனர். (இ)

# தமிழின அழிப்பு குறித்து லண்டனில் ஆராய்வு





(லண்டன்)

தமிழ் தகவல் நடுவத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமை தினம் லண்டன் Shiraz Mirza Manor Park Hall மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ் தகவல் நடுவத்தின் இயக்குநர் மற்றும் அந்த அமைப்பின் இளைய செயற்பாட்டாளர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந் நிகழ்வில் இலங்கையில் தாயக உறவுகளுக்கு இழைக்கப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் திட்டமிட்ட தமிழின அழிப்பு சம்பந்தமாகவும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் அத்துடன் அகதிகளுக்காக குரல் கொடுக்கும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் என அனைவரும் கலந்து கொண்டனர். (இ-9)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

122

போர்த்துக்கீசருக்கும் டச்சுக் காரருக்கும் வியாபாரமும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதுமே பிரதான செயல்களாக இருந்தன. இதற்கு மாறாக பிரித்தானியரோ இலங்கையில் தமது அதிகாரத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் தமது குடியேற்றக் கொள்கைகளை அமைத்தனர்.

இதேபோன்று அவர்கள் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலும் செய்திருந்தனர். இந்த நோக்கங்கள் இலங்கை வரலாற்றில் நீண்டு தொடரக்கூடிய பாதிப்புக்களை ஏற்படுத்தின. இவை தமிழரின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் பாரிய பாதிப்புக்களை நிரந்தரமாக ஏற்படுத்தி விட்டன என்றே கூறவேண்டும்.

போர்த்துக்கீச டச்சு ஆதிக்கத்தினின்றும் தன்னைக் காத்துக் கொண்ட கண்டி இராச்சியம் 1815 இல் பிரித்தானியரிடம் வீழ்ந்தது. இந்நிகழ்வு இலங்கை முழுவதையும் ஒன்றுபடுத்தி ஒரே நிர்வாக அலகினுள் கொண்டுவருவதற்கு பிரித்தானியருக்கு உதவியது.

பிரித்தானியர் ஒரு மத்திய நிர்வாகத்தை உருவாக்குவதில் ஈடுபடலாயினர். இதற்கான முதற்காரணம் நிர்வாகத்தின் செயற்திறனை அதிகரிப்பதற்காக இருந்தபோதிலும் அதிகபட்சமான பொருளாதார, அரசியல் நலன்களைப் பெறுவதற்காகச் சட்டம், ஒழுங்கு என்பவற்றைக் கொண்டதொரு ஆட்சியை மேலும் முழுமையாக அமுல் செய்வதற்கேயாகும்.

இந்த ஒன்றுபடுத்தப்பட்ட மத்திய நிர்வாகச் செயற்பாடுகள், தமிழரின் அன்றைய சமூக, பொருளாதார அரசியல் வாழ்க்கையை மிகவும் அதிகமாகப் பாதித்தன. மேலும் இலங்கையில் தமிழ்பேசும் ஆட்சியுரிமைப் பிரதேசங்களாக இருந்த வடக்கையும் கிழக்கையும் பிரித்தானியர் இருவேறு மாகாணங்களாகப் பிரித்தது மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது.

இந்த வடக்கு- கிழக்குப் பிரதேசங்கள் நீண்டகாலமாக ஒரே ஆட்சியுரிமைப் பிரதேசமாக ஏன் போர்த்துக்கீச, டச்சு ஆட்சியின்போதும்கூடப் பேணப்பட்டு வந்திருந்தன.



> “பிரித்தானியர் இலங்கையை ஆக்கிரமித்த போது அறிமுகப்படுத்திய தேசாதிபதியின் சபையை ஒழித்துப் பதிலாக சட்ட நிர்வாக, சட்ட நிருபண சபைகளின் உருவாக்கத்தை கோல்புறூக் சிபாரிசு செய்தார். இவ்விரு சபைகளும் 10 பங்குனி 1833 இல் உருவாக்கப்பட்டு ஒரு புதிய ஆணைக்குழுவும் அறிவுறுத்தல்களும் தேசாதிபதி ஹோட்டனுக்குக் (Governor horton) கொடுக்கப்பட்டன”

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

ஜனநாயக முறையையும் வெஸ்ற்மினிஸ்ரர் பாணியிலமைந்த நாடாளுமன்றமும் அதையொட்டியிருந்த அரசியலமைப்பு அரசியல் நடைமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டதனால் பெரும்பான்மை இனமாகிய சிங்களவரின் கைகளுக்கே அதிகாரம் சென்றடைந்தது.

ஐரோப்பியரிடம் தாம் இழந்த ஆட்சியுரிமையைப் பிரதேசங்களைத் தமிழர் பின் எப்போதுமே மீளப்பெறவில்லை என்பதுடன் அவர்கள் கடந்த காலத்தில் கொண்டிருந்த சமூக, அரசியல் அந்தஸ்தைப் பின் ஒருபோதுமே அனுபவிக்க முடியாத நிலையும் ஏற்பட்டது.

இந்த மாற்றங்கள் இலங்கைத் தமிழர்களை எவ்வாறு பாதித்தது என்பதை இப்போது ஆராய்வது அவசியம். 1820களில் பிரித்தானிய அரசாங்கம் இலங்கையினது நிர்வாகத்தை விசாரிப்பதற்காக ஓர் ஆணைக்குழுவை நிறுவத் தீர்மானித்தது.

இதன்படி மேஜர் கோல்புறூக்கை (Major Colebrooke) ஆணையாளராகக் கொண்ட அரச ஆணைக்குழுவொன்றை 1828 ஜனவரி 18 ஆம் திகதியன்று அது நியமித்தது. கோல்புறூக் இலங்கைக்கு 1829 ஏப்ரல் 11 ஆம் திகதி வந்தார்.

தொடர்ந்து சார்ல்ஸ் கமறோன் (Charles Hay Cameron) என்ற நீதி நிர்வாக ஆணையாளர் 1830 ஏப்ரல் 30 ஆம் திகதி இங்கு வந்து கோல்புறூக்குடன் இணைந்து கொண்டார். நீதி நிர்வாக அறிக்கையின் பிரதான பொறுப்பு கமறோனுடையதாக இருக்க எஞ்சிய வேலைகளுக்கு கோல்புறூக் பொறுப்பாக இருந்தார்.

இவ் ஆணையாளர் 1831 பெப்ரவரி 3 ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கியிருந்து அறிக்கைகளைத் தயாரித்தது டன் பின்னர் அதனை இங்கிலாந்தில் பூரணப்படுத்தினார்.

இவர்கள் மூன்று பிரதான அறிக்கைகளை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தனர். இவற்றில் முதலாவது நிர்வாகம் பற்றியது. (24 மார்கழி 1831), இரண்டாவது வருமானம் பற்றியது (31 ஜனவரி 1832), மூன்றாவது நீதி நிர்வாதம் நடைமுறை பற்றியது (31 ஜனவரி 1832).

பிரித்தானியர் இலங்கையை ஆக்கிரமித்தபோது அறிமுகப்படுத்திய தேசாதிபதியின் சபையை ஒழித்துப் பதிலாக சட்ட நிர்வாக, சட்ட நிருபண சபைகளின் உருவாக்கத்தை கோல்புறூக் சிபாரிசு செய்தார்.

இவ்விரு சபைகளும் 10 பங்குனி 1833 இல் உருவாக்கப்பட்டு ஒரு புதிய ஆணைக்குழுவும் அறிவுறுத்தல்களும் தேசாதிபதி ஹோட்டனுக்குக் (Governor horton) கொடுக்கப்பட்டன.

ஐந்து பேர் கொண்டதொரு சட்ட நிர்வாக சபை ஏற்பாடு செய்யப்பட்டது. படைகளின் கட்டளை அதிகாரி, குடியேற்றச் செயலாளர், இராச சட்டத்தரணி, குடியேற்றப் பொருளாளர், மத்திய மாகாண அரசாங்க அதிபர் ஆகியோர் இச்சபையில் இருந்தனர்.

பிரதம நீதியரசர் தரைப் படைகளின் கட்டளையதிகாரி, குடியேற்றச் செயலாளர், கணக்காளர் நாயகம், கொழும்பிலுள்ள சுங்கக் காரியாதிகாரி என்போர் சட்ட நிருபண சபையில் அங்கம் வகித்தனர்.

ஐரோப்பிய வணிகர் அல்லது வதிவோர் என்பவருடன் உயர் வகுப்பினராகக் கருதப்பட்ட உள்ளூர் மக்கள் சிலரும் முடிந்த அளவுக்குச் சம விகிதத்தில் ஆறு உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் இச்சபைக்கு நியமிக்கப்படல் வேண்டும் என கோல்புறூக் அரசியல் யாப்பில் விதந்துரைக்கப்பட்டது.

(தொடரும்)

# அதிகாரம் குவிந்து கிடக்கிறது என்பதற்காக

# ‘ஹிட்லரின் வாரிசாக செயற்பட முடியாது’

## மைத்திரியை நோக்கி இம்ரான் எம்.பி.விமர்சனம்

(கொழும்பு)

அதிகாரம் ஒருவரிடம் குவிந்து கிடக்கிறது என்பதற்காக, ஹிட்லரின் வாரிசு போல் இனி யாரும் செயற்பட முடியாதென, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகளை விமர்சித்துள்ளார்.

அலரிமாளிகையில்வைத்து நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், ஜனாதிபதியின் முரட்டுப் பிடிவாதத்துக்கான சிறந்த வைத்தியத்தை, நீதிமன்றம் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், அரசியல் நோக்கங்களுக்காக பொதுமக்கள் அசௌகரியத்துக்குள்ளாவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்த அவர், ஜனாதிபதியைப் பற்றிக் கருத்துக் கூறுவதற்கு ஒன்றுமில்லை என்றும் தெரிவித்தார்.

கடந்த 50 நாட்களில் ஜனாதிபதி யார் என்பதை பொதுமக்கள் நன்கு உணர்ந்திருப்பர் என்றும் மிஸ்டர் பீனின் நகைச்சுவைகளைப் பார்த்து சிரிக்க மட்டுமே முடியுமெனவும் அதுபற்றி ஆராய்ந்து, நேரத்தை வீணாக்குவதில் எந்தப் பயனுமில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)





## ஐ.தே.கவுடன் இணையமாட்டேன்

### வியாழேந்திரன் மறுப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியில் இணையும் எண்ணம் தனக்கு எப்போதுமே இல்லை என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இதனைத் தெரிவித்துள்ளார்.

"சிலர் என்னிடம் நேரடியாக கருத்துக் கேட்காமல், என்னை அவமானப்படுத்தும் நோக்கிலும், தங்களை பிரபல்யப்படுத்தும் நோக்கிலும் பொய்யான செய்திகளை பரப்பி வருகின்றனர். நான் ஐக்கியக் தேசிய கட்சியுடன் சேரப் போகிறேன் என்ற கதை உண்மைக்கு புறம்பானது. ஐக்கிய தேசிய கட்சியில் சேரும் எண்ணம் எனக்கு எப்போதுமே இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வியோழேந்திரன் தேசிய அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி பிரதிய மைச்சராக பதவி வகித்தார். தற்போது புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அவரது பிரதியமைச்சர் பதவி இல்லாமல் போயுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் அவரைப்பற்றிய பல விமர்சனங்கள் எழுந்த வண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1590

Search for people, places and things

### குணால்

மனிதனின் வாழ்க்கை




### விஜயன்

தாய் இறக்கும்போது மொட்டை போடக் கற்றுத் தந்த பகுத்தறிவு அவர் இருக்கும் போது சோறு போடக் கற்றுத் தரவில்லை



### கலை

தலைமுறை இடைவெளி




### டிசான்

அம்மா: டேய் ஏன்டா முடிய நீளமா வளத்துக்கிட்டு ரப்பர் பாண்ட் எல்லாம் மாட்டிக்கிட்டு அலையிற

பையன்: இதுதாம்மா இப்போ பஷன்

அம்மா: நாயே உங்க அக்காவை பொண்ணு பார்க்க வந்தவங்க உன்னைப் பிடிச்சிருக்குண்டு சொல்லிட்டுப் போயிருக்காங்க



### தேவன்





### சிராஜ்




மனைவியின் தலைவலியை போக்கும் மாத்திரை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# பாலிதீவு- பயணத்தின் அனுபவம்

## 01

சோ.நிக்கஜ்
அரியாலை.



பயணக்கட்டுரை ஒன்றை எப்படியும் எழுதி விடுவது என்ற தீர்மானத்தில் தான் பாலி பயணம் முடிந்தது முதல் இருக்கிறேன். ஆனால் அதன் நீள,அகலம் எவ்வளவு, எதையெல்லாம் உள்ளடக்குவது. எப்படி ஒரு பயணக்கட்டுரை அமைய வேண்டும் என்பதில் திட்டம் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. சரி எழுத/




நினைவிற்கு வருவதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இலங்கைக்குள்ளே சுற்றித் திரிந்த எங்களுக்கு கடந்த வருடம் தாய்லாந்து பயணம் சாத்தியமாயிற்று. அது இங்கிருக்கும் சுற்றுப் பயண ஏற்பாட்டுக் குழு மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு பயணப்பட்டிருந்தோம். அதில் பல்வேறுபட்ட சொதப்பல்கள், பண விரயங்கள் இருந்தன. அடுத்த இவ்வாறான பயணத்தில் பணத்தின் விரயத்தை தவிர்க்க உறுதிகொண்டோம்.

இந்த வருடமும் எங்கேனும் பயணம் செய்வது என முடிவு செய்ததும் முதல் தெரிவில் இருந்தது இந்தோனேஷியாவின் பாலிதீவுகள் தான். அதற்கு முக்கிய காரணம் On Arrival VISA எனப்படும் விமான நிலையத்திலேயே விசா பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி தான்.

வெளிநாட்டுப் பயணம் என்றதும் ஆஹா... ஓஹோ.. என்று நினைக்க வேண்டாம். எல்லோரும் இருக்கும் பணத்தை கொண்டு சமாளிக்க வேண்டும். சாதாரணமாக விமான பயணச் சீட்டுக்களின் விலை 55,000/- வரை இருக்கும் பயணச் செலவை இதுவே பாதி தின்று விடும். எனவே விமான பயணச்சீட்டு மலிவாக இருக்கும் நாட்களில் பயணம் செய்யவேண்டும். அத்தோடு பயணப்படும் எல்லோருக்கும் அந்த நாட்கள் வசதியாக இருக்க வேண்டும். பிரயாணச் சீட்டு கிட்டத்தட்ட 40% மலிவான விலையில் Air Asia இல் முற்பதிவு செய்யப்பட்டது.

Air Asia ஒரு மலிவான சேவை வழங்குநர். ஆனால் வசதி அவ்வளவாக இருக்காது. அதாவது கொழும்பு செல்லும் சொகுசு பேருந்து அரை சொகுசு பேருந்து போல. அது போலவே அங்கு தங்குமிடமும் இங்கிருந்தே மலிவானதும் வசதியானதும்!! ஆக, பார்த்து முற்பதிவு செய்யப்பட்டது. இவையெல்லாம் கைப்பேசியில் இருந்த செயலி மூலமே செய்து முடிக்கப்பட்டது.

இனி செய்யவேண்டியது பயணப்படுவதும் சுற்றிப் பார்ப்பதும் மட்டுமே. ஏற்கனவே பாலிக்குச் சென்று வந்த சிலரிடமும் இணையத்தில் இருந்து அங்கு செல்வதற்கு அவசியமான இடங்களின் பட்டியல் தயாரிக்கப் பட்டது.

இனி பயணப்படுவது மாத்திரம் தான் மீதம்.

நவம்பர் மாதம் 18 திகதி இரவு 12 மணிக்கு குறிப்பிட்ட நேரத்தை விட ஒரு மணிநேரம் தாமதமாக இலங்கையிலிருந்து புறப்பட்டு அதிகாலை (மலேசிய நேரம்) 5.30 இற்கு மலேசிய விமான நிலையத்தை அடைந்தோம். பயண நேரம் 3 1/2 மணி நேரம்). அங்கிருந்து மாலை 6.30இற்கு புறப்பட்டு இரவு 9.30 மணியளவில் இறங்கியிருப்போம்.

விமான நிலையத்தில் 50 யூரோவை மாற்றிக் கொண்டோம். கிட்டத்தட்ட 8 இலட்சம் ரூபாய் சொச்சம் தந்தார்கள். அவர்கள் பொருளாதாரம் அப்படி சிக்கலில் தான் இருக்கிறது. நம்மூர் காசு ஒரு ரூபாவுக்கு கிட்டத்தட்ட 85 ரூபாய் இந்தோனேஷிய பணம் கிடைக்கும். மொய்துப்பிடித்த சாரதிகளிடையே ஒருவரை பிடித்து ஒரு இலட்சம் ரூபாவுக்கு பேரம் பேசி (அதுவே ரொம்ப அதிகம் என பின்னர் தான் தெரிந்து கொண்டோம்). ஏற்கனவே பதிவு செய்ப்பட்ட விடுதிக்குச் சென்று குளித்து உடை மாற்றி ஒரு கடை தேடிச் சென்று இரவு உணவருந்தி கட்டிலில் விழ நேரம் 12இற்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

நாளைக்·கென்று திட்டம் ஏதும் கையிருப்பில் இருக்க வில்லை. நல்ல தூக்கம் மட்டுமே தேவையாயிருந்தது.

நாங்கள் தூங்கி எழுந்திருக்கும் முன்பாக உங்களுக்கு பாலிதீவை அறிமுகப்படுத்தி விடுகிறேன்.

பாலி இந்தோனேஷிய தீவுக்கூட்டத்தில் இருக்கும் கிட்டத்தட்ட 5600 சதுர கிலோமீற்றர் கொண்ட ஒரு குட்டித்தீவாகும். இயற்கை எழில் கொஞ்சும் காடுகள், அருவிகள், கடற்கரைகளைக் கொண்டது. இங்கு இந்தோனேஷியன் மொழியே தேசிய மொழியாக அறியப்பட்டாலும் அநேகம் பேர் பாலினஸ் எனப்படும் மொழியையே பேசுகிறார்கள். மொத்த சனத்தொகை 4.3 மில்லியன். அவர்களில் கிட்டத்தட்ட 84 வீதத்தினர் இந்துகள் (இந்தோனேசியவில் அதிகூடிய வீதம் இந்துக்கள் இருக்கும் இடம்).

இத்தீவின் பிரதான வருமான மார்க்கம் சுற்றுலா தான். இதைவிட விவசாயம் மற்றும் மர கைவினைப் பொருள் உற்பத்தி, துணி அலங்காரம், மீன்பிடி போன்றவற்றை குறிப்பிடலாம்.

(பயணம் தொடரும்)

## கொடிகாமத்தில் 3 இடங்களில் அனர்த்த கால சேவைகள்

(சாவகச்சேரி)

கொடிகாமத்தில் மூன்று இடங்களில் அனர்த்த கால சேவைகள் முன்னெடுக்கப் பட்டிருப்பதாக சாவகச்சேரி பிரதேச சபையின் உபதவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக நிலவிய அசாதாரணமான கால நிலை காரணமாக எமது பிரதேசத்தில் சில வீதிகளில் வெள்ளம் தேங்கிப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டன.

இந்நிலையில் மக்களின் இடர் போக்கும் முகமாக கொடிகாமம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மூன்று வீதிகள் மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் செப்பனிடப்பட்டுள்ளன.

பிரதேச சபையில் காணப்படுகின்ற வாகனங்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் உதவியுடன் இவ் வீதிகள் மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றாற் போல் செப்பனிடப்பட்டுள்ளன.

கொடிகாமம் கொலனி வீதி,கரம்பகம் வீதி, உசன் பகுதியிலுள்ள வீதிகளே இவ்வாறு அனர்த்த காலத்தில் அவசர தேவை கருதி செப்பனிடப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கொடிகாமம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 350 | 400 |
| தக்காளி | 300 | 350 | - | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 30 | 60 |
| கோவா | 100 | 100 | 80 | 120 |
| கரட் | 200 | 260 | 180 | 200 |
| பூசணி | 80 | 50 | 40 | 50 |
| புடோல் | 100 | 120 | 90 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 110 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 95 | 100 |
| பாகற்காய் | 250 | 400 | 250 | 240 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 200 | 240 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 120 | 200 |
| பீற்றூட் | 250 | 160 | - | 180 |
| கறிமிளகாய் | 340 | 340 | 200 | 240 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 200 | 180 | 110 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | 60 | 80 | - |
| கீரை-1பிடி | 50 | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 300 | 400 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 50 |
| இராசவள்ளி | 200 | 180 | 160 | 150 |
| வெங்காயப்பூ | - | 400 | - | - |
| முள்ளங்கி | 100 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 120 | 50 |

## தொழிலாளர்களின் சம்பள உயர்வு பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் ம.ராமேஸ்வரன் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## விபத்தில் மாணவன் மரணம்

(பொலநறுவை)

பொலநறுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லேல்ல பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 2.05 மணியளவில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த கடுகதி புகையிரதத்தில் மோதியதிலேயே குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

கதுருவெல - கல்லேல்ல பகுதியைச் சேர்ந்த மொஹமட் அஸ்மீர் என்ற 17 வயதுடைய மாணவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

## மத்தியஸ்த சபை அமர்வுகள்

(குருநகர்)

ஜே/246 யாழ்ப்பாண மத்தியஸ்த சபை அமர்வுகள் எதிர்வரும் 23.12.2018 ஞாயிறு முதல் தொடர்ந்து யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் என தவிசாளர் ஆர்.திலகரத்தினம் அறிவித்துள்ளார். (இ-106)

## சிறுபான்மையினருக்கு மைத்திரி செய்த துரோகம்

(ஏறாவூர்)

சிறுபான்மையினரோடு முரண்பட்ட மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியது சிறுபான்மையினருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்த துரோகமாகுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை, மாவட்ட சிவில் சமூக ஒன்றியம் அகியன ஒழுங்கு செய்த "ஜனநாயகத்தைப் பாதுகாப்பது மக்களின் கடமைப்பாடாகும்" எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கும் கலந்துரையாடலும் மட்டக்களப்பு கூட்டுறவுக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## 20 இலட்சம் ஒதுக்கீட்டில் மண்டபங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகரில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட இறங்குதுறையில் அமைந்துள்ள மண்டபமும் ஓய்வுநிலை மண்டபமும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டதாக அச்சங்கத்தின் தலைவர் யூ.சகாயராசா தெரிவித்தார்.

இதேவேளை இருள் சூழ்ந்த பகுதியாக காணப்பட்ட றெக்கா கடற்கரை வீதியில் அரசாங்க நிதி ஒதுக்கீட்டில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டதாகவும் இதனால் பொதுமக்கள், இரவு நேரக் கடற்றொழிலாளர்கள் என அனைவரும் நன்மையடைவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-106)

## தென்மராட்சியில் மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழா 22ம் திகதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்விப் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலைவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.(இ-5)

## துப்பாக்கி விற்பனை! மூவர் கைது

(கம்பஹா)

கம்பஹா, மாதம்மன பகுதியில் துப்பாக்கி விற்பனையில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது துப்பாக்கி ஒன்றும், அதற்கான தோட்டாக்கள் 4 மற்றும் மகசின் ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த தொழிலில் ஈடுபட்டு வரும் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

30 மற்றும் 43 வயதிற்குட்பட்ட மினுவாங்கொட மற்றும் பிங்கிரிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (இ-7)

# சிறுவர் அரங்கம்

## பரிசில் பாதி



ஒருநாள் கிருஷ்ண தேவர் அரண்மனையில் கிருஷ்ண லீலா நாடக நாட்டியம் நடைபெற ஏற்பாடு செய்திருந்தார். தெனாலிராமனைத் தவிர மற்ற எல்லா முக்கிய பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசியும் மற்றும் சில பெண்களும் கலந்து கொள்வதால் தெனாலிராமன் இருந்தால் ஏதாவது கோமாளித்தனம் செய்து நிகழ்ச்சியை நடைபெறா வண்ணம் தடுத்து விடுவான் என எண்ணி, தெனாலிராமனை மட்டும் நாடக அரங்கினுள் விட வேண்டாமென்று வாயில் காவலனிடம் கண்டிப்புடன் சொல்லி விட்டார் மன்னர்.

இதை அறிந்த தெனாலிராமன், எப்படியாவது அரங்கத்தினுள் சென்று விடுவது எனத் தீர்மானித்துக் கொண்டான்.

நாடகம் நடைபெறும், அரங்கின் வாயிலை நெருங்கினான் தெனாலிராமன். உள்ளே செல்ல முற்பட்டான்.

வாயில் காவலன் அவனை உள்ளே விட மறுத்து விட்டான். மீண்டும் மீண்டும் கெஞ்சினான். வாயில் காவலாளி மசியவில்லை.

இந்நிலையில் தெனாலிராமன் ஒரு தந்திரம் செய்தான். "ஐயா, காவலாளியே என்னை உள்ளே விட்டால் என்னுடைய திறமையால் ஏராளமான பரிசு கிடைக்கும். அதில் பாதியை உனக்குத் தருகிறேன்" என்றான். இதைக் கேட்ட வாயில் காவலாளி முதலில் சம்மதிக்காவிட்டாலும் பின்னர் கிடைப்பதில் பாதிப் பரிசு கிடைக்கிறதே என்று மகிழ்ந்து அவனை உள்ளே விட்டான்.

அரங்கத்தினுள் செல்ல வேண்டுமானால் மீண்டும் இன்னொரு வாயில் காவலாளியைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவனும் தெனாலிராமனை உள்ளே விட மறுத்தான். முதற் வாயில் காவலாளியிடம் சொல்லியதையே இவனிடமும் சொன்னான். இவனும் பாதிப்பரிசு கிடைக்கிறதே என்று மகிழ்ந்து அவனை உள்ளே விட்டு விட்டான்.

ஒருவருக்கும் தெரியாமல் தெனாலிராமன் ஓர் மூலையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

அப்போது கிருஷ்ணன் ஆக நடித்தவன் வெண்ணெய் திருடி கோபிகைகளிடம் அடி வாங்கும் காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. உடனே மூலையில் இருந்த தெனாலிராமன் பெண் வேடம் அணிந்து மேடையில் தோன்றி கிருஷ்ணன் வேடம் போட்டு நடித்தவனைக் கழியால் நையப் புடைத்து விட்டான். கிருஷ்ண வேடதாரி வலி பொறுக்கமாட்டாமல் அலறினான்.

இதைப்பார்த்த மன்னர் கடுங்கோபமுற்று மேடையில் பெண் வேடமிட்டுள்ள தெனாலிராமனை அழைத்து வரச்செய்தார். பின் "ஏன் இவ்வாறு செய்தாய்" என வினவினார். அதற்குத் தெனாலிராமன் "கிருஷ்ணன் கோபிகைகளிடம் எத்தனையோ மத்தடி பட்டிருக்கிறான். இப்படியா இவன் போல் அவன் அலறினான்" இதைக் கேட்ட மன்னருக்கு அடங்காக் கோபம் ஏற்பட்டது. தெனாலிராமனுக்கு 30 கசையடி கொடுக்குமாறு தன் பணியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

இதைக் கேட்ட தெனாலிராமன் "அரசே இப்பரிசை எனக்குக் கொடுக்க வேண்டாம். ஏனென்றால் எனக்குக் கிடைக்கும் பரிசை ஆளுக்குப் பாதி பாதி தருவதாக நம் இரண்டு வாயில் காவலாளிகளிடம் உறுதியளித்து விட்டேன்.

ஆகையால் இப்பரிசினை, அவர்கள் இருவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

உடனே மன்னர் அவ்விரு வாயில் காவலாளிகளையும் அழைத்து வரச் செய்து இது குறித்து விசாரித்தார்.

அவ்விருவரும் உண்மையை ஒத்துக் கொண்டார்கள்.

அவ்விருவருக்கும் தலா 15 கசையடி கொடுக்குமாறு மன்னர் பணித்தார். மேலும் தெனாலிராமனின் தந்திரத்தைப் பாராட்டி அவனுக்குப் பரிசு வழங்கினார்.

## பொன்மொழிகள்

• அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயற்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

• கற்ற அறிவையும் பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.

• நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

• நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

• சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.

• மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.

• உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.

• செயல் புரியாத மனிதனுக்குத் தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.

## உலகின் சிறந்த 10 தத்துவ ஞானிகள் என்ன சொல்கிறார்கள்?

(நேற்றைய தொடர்ச்சி...)

### புத்தர்



தத்துவ ஞானி கௌதம புத்தரை அடிப்படையாகக்கொண்டு பௌத்த சமயம் உருவாக்கப்பட்டது. கௌதமருடைய வாழ்க்கையையும் வழிகாட்டல்களையும் புத்த மதம் ஏற்றுக்கொண்டுள்ளது.

"பிரார்த்தனைகளை விட மிக உயர்ந்தது பொறுமை தான்" என்பது புத்தரின் புகழ்பெற்ற பொன்மொழி.



### வள்ளலார்

வள்ளலார் என்ற இராமலிங்க அடிகளார் ஓர் சிறந்த தத்துவ ஞானி. சாதி,சமய வேறுபாட்டுக்கு எதிரான தமது நிலைப்பாடு காரணமாக ஆன்மீகவாதிகளாலே விமர்சனத்திற்கு உள்ளானவர். "அறியாமை என்னும் மாயத்திரைகள் நம்மை விட்டு விலகினால் அருட்பெருஞ்சோதியான ஆண்டவரை நாம் தரிசிக்கலாம்" என்பது வள்ளலாரின் வாதம்.

(தொடரும்...)

உயர்ந்த இலட்சியத்தை அடைய வீறுடன் உழைப்பனுக்கு சிறுகுறைகள் உறுத்தாது.

~ யாரோ

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவை வியாபகம் பெற வேண்டும்

தமிழ் மக்கள் பேரவை உதயமாகி நாளை 19ஆம் திகதி மூன்று ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

காலத்தின் தேவை அறிந்து மக்கள் இயக்கமாக உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை இன்று தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய அமைப்பாக விளங்குவது அதன் உருவாக்கத்துக்குக் கிடைத்த மக்கள் அங்கீகாரமாகும்.

தமிழ் அரசியல் சூழ்நிலை மிகவும் ஆபத்தானதாக – தமிழ் அரசியல் தலைமை தடம் மாறிப் பயணித்தவேளை; தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார சூழமைவில் ஒரு நிலைத்த உறுதிப்பாட்டை எடுப்பது அவசியமாயிற்று.

தமிழ் மக்கள் சார்ந்த அமைப்புக்கள் எதனைக் கூறினாலும் அதனைக் கேட்பதற்கு தமிழ் அரசியல் தலைமை தயாராக இல்லை.

சுருங்கக்கூறின் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற மக்கள் பிரதிநிதித்துவம் தமக்குக் கிடைத்திருப்பதால், தாம் நினைப்பதும் செய்வதும் சரியானது என்றும் அது தொடர்பில் எவரும் கருத்துரைக்க முடியாது என்பதுமான சர்வாதிகாரத்தன்மை தமிழ் அரசியல் தலைமையில் எழுகை பெற்றிருந்தது. இப்போக்கு தமிழ் மண்ணில் நடந்த தியாகங்கள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் அத்தனையையும் தகர்த்து விடப் போகிறது என்ற அறிகுறியைக் காட்டி நின்றன.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் அமைப்பு 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி உருவாக்கப்பட்டது.

பொது அமைப்புகள், சமூக நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் என்பவற்றின் பிரசன்னத்துடன் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தனது முதற்பணியாக அகிம்சை வழியில் தமிழ் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் உன்னதமான இலக்குடன் **எழுக தமிழ்** என்ற கோசத்துடன் தனது பணியை ஆரம்பித்தது.

யுத்தம் முடிந்த பின்னர் அகிம்சை வழிப் போராட்டத்தில் ஈடுபடுவதுகூட ஆபத்தானது என்ற அச்சமான சூழ்நிலை தமிழர் தாயகத்தில் விரவிக் கிடந்தவேளை,

எழுக தமிழ் என்ற தமிழ் மக்கள் பேரவையின் கோசம் இனப்பற்று மிகுந்த தமிழ் மக்களை வீறுகொள்ள வைத்தது.

அதன்விளைவாக வடக்கிலும் கிழக்கிலும் எழுக தமிழ் என்ற அகிம்சைப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பங்கேற்றனர். இந்த எழுச்சிப் பேரணி தமிழ் மக்களுக்கு எவரும் கெடுதி செய்ய முடியாது என்ற செய்தியைப் பதிவு செய்தது.

ஆம், காலத்தின் தேவை கருதி தமிழ் மக்களின் இயக்கமாக மலர்ந்த தமிழ் மக்கள் பேரவை இன்னும் வியாபகம் பெற வேண்டும். உள்நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமிழ் மக்கள் பேரவையின் கிளைகள் உருவாக்கப்பட்டு, ஒரு குடையின் கீழ் தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தி எங்கள் இனம் வாழ, எங்கள் உயிராம் தமிழ் வாழ தமிழ் மக்கள் பேரவை பெரும்பணி புரியட்டும்.

பேரவையில் அனைத்து தமிழ் மக்களும் அங்கம் பெற்று, ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் சொத்தாக பேரவையைப் பலப்படுத்துவோம்.

மூன்றாண்டு நிறைவில் இஃது நிறைவேற இறைவன் துணை நிற்கட்டும்.

## மகிந்தவுடன் இணையும் போது பூனைகள் எம்மோடு இணைகையில் மட்டும் புலிகள்

### முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்கும் போது பூனைக்குட்டிகளாகத் தெரிபவர்கள், எம்மோடு இணைகையில் மாத்திரம் புலிகளாகத் தெரிகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் நேற்று திங்கட்கிழமை காலிமுகத்திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜனநாயக வெற்றிக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு தற்போது விடுதலைப்புலிகள் என்று முத்திரை குத்த முயற்சிக்கின்றார்கள். இந்த நாட்டில் அனைத்து இனத்தவரையும் ஒன்றிணைத்து, ஒருமித்த நாடு என்ற வகையில் முன் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கத்தக்க தலைமைத்துவம் வடக்கில் உருவாகியுள்ளது. அவர்களுடன் இணைந்து செயற்படுகையில் புலிகள் என்கின்றார்கள்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக நாங்களே அவரை அமர வைத்தோம். எனவே அவரது செயற்பாடுகள் தொடர்பில் கேள்வி கேட்கும் அதிகாரம் எமக்குள்ளது.

நாட்டிற்கும், மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே அவரை ஜனாதிபதியாக்கியிருந்தோமே தவிர மகிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கோ, அவரை சட்டத்திற்கு விரோதமாக பிரதமராக நியமிப்பதற்கோ அல்ல என்பதை மைத்திரிபால சிறிசேன நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### பதிவுத்திருமணத்தின்போது

## தப்பியோடி மணமகனை மடக்கிப் பிடித்த உறவினர்கள்

பித்தளைத் தாலியைக் கட்டி பெண்ணொருவரைத் திருமணம் செய்த நபர் ஒருவர், பதிவுத் திருமணத்துக்கு ஏற்பாடு செய்த போது அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட வேளை உறவினர்களால் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சம்பவம் வடமராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு தரகர் மூலம் கொழும்பில் வசிக்கும் நபர் ஒருவர் மணமகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருமணத்துக்கு முன்னர் சீதனமாக 5 இலட்சம் ரூபாயை பெண் வீட்டார் மாப்பிள்ளைக்கு கொடுத்ததையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது.

தாலி கட்டிய பின்னர் பதிவுத் திருமணத்துக்கு தயாராகுமாறு பெண் வீட்டார் மாப்பிள்ளையை அழைத்துள்ளனர். அவசரமாக கொழும்புக்குச் செல்ல வேண்டும். ஆகவே பதிவுத் திருமணம் வேண்டாம் என்று மாப்பிள்ளை மறுத்துள்ளார்.

அதன்போது பெண் வீட்டாருக்கு சந்தேகம் ஏற்பட்டு மணப்பெண்ணுக்கு கட்டிய தாலியைப் பார்த்தபோது அது பித்தளை என்று தெரிய வந்தது. அதனையடுத்து மாப்பிள்ளையை மடக்கிப் பிடித்த பெண் வீட்டார்வல்வெட்டித்துறை பொலிஸில் ஒப்படைத்தனர்.

மாப்பிள்ளை ஏற்கெனவே கொழும்பில் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும், பெண்ணுக்கு தோழியாக வந்தவர் மாப்பிள்ளையால் பணம் கொடுத்து வவுனியாவில் இருந்தும் அழைத்து வரப்பட்டவர் என்றும் பொலிஸ விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து திருமணப் பெண்ணின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு விடயத்தைப் பெரிதுபடுத்தாமல் சீதனமாகக் கொடுத்த பணத்தை மாப்பிள்ளையிடமிருந்து வாங்கித் தருமாறு பெண் வீட்டார் பொலிஸாருக்கு கூறியுள்ளனர்.

அதனையடுத்து மாப்பிள்ளையாக வந்தவர் அந்தப் பணத்தை மீண்டும் பெண் வீட்டாருக்கு ஒப்படைத்து விட்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## அரசியல் நெருக்கடிக்கு தீர்வு அவுஸ்திரேலியா பாராட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி தீர்க்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்வதாக இலங்கையிலுள்ள அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் நீண்டகால நண்பர்கள் என்ற ரீதியில், இலங்கையின் அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்கின்றோம். அது இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களின் உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகின்றது எனவும் அவ்வலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் அமைதி, நல்லிணக்கம் மற்றும் செழுமைக்காக இலங்கையுடனான நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் இரு நாடுகளுக்கிடையில் உறவை பலப்படுத்தவும் எதிர்பார்ப்பதாகவும் இலங்கையிலுள்ள அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## இவ்வாண்டில் இதுவரையில் விபத்துக்களால் 2590 பேர் பலி

(கொழும்பு)

பத்து வருடங்களுக்கு முன்னர் பதிவாகிய வீதி விபத்துக்களின் அளவைவிட இந்த வருடத்தில் பதிவாகும் வீதி விபத்துக்களின் அளவானது இரண்டு மடங்குகள் அதிகரித்த மட்டத்தில் பதி வாகியுள்ளமையை காணக்கூடியதாகவுள்ளதுணபொலிஸ்போக்குவரத்து பணிப்பாளர் இந்திக்க ஹப்புகொட தெரி வித்தார்.

நாடளாவிய ரீதியில் இவ்வருடத்தில் மாத்திரம் சுமார் 2481 வீதி விபத்துக்கள் வரையில் பதிவாகியுள்ளன. அதில் 2590 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள மொத்த வாகனங்களில் நூற்றிற்கு 56 வீதமானவை மோட்டார் சைக்கிள்களாக காணப்படுகின்றன. அதிகளவான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள் விபத்துக்களாகவே பதிவாகின்றன. முக்கியமாக இத்தகைய வாகன விபத்துக்கள் அதிக வேகத்தில் பயணித்தல், முந்தி செல்ல முற்படல் ஆகிய காரணங்களினால் இடம்பெறுகின்றன.

2015ற்கும் 2018 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வீதி விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இவ்வாறாக உயிரிழப்பவர்களில் பலர் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

### விசேஷங்களுக்குப் போகும்போது...

- வந்திருப்பவர்களிடம் நல்ல விடயங்களை மட்டுமே பேசுங்கள்.
- பிறர் நமக்கு வேண்டாதவர்களாயினும் அவர்களைப் பற்றி அவதூறு பேசாதீர்கள்.
- மகிழ்ச்சியான விடயத்தை மனம்விட்டு பேசி வாழ்ந்திடுங்கள்.
- உணவுகள், உபசரிப்புக்கள் குறைவாக இருந்தாலும் அதைப்பற்றி விமர்சனங்கள் செய்யாதீர்கள்.
- பிரச்சினைகளை உண்டுபண்ண வேண்டும் என்கிற நோக்கத்துடன் செல்லாமல் அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்கிற நோக்கத்துடனே செல்லுங்கள்.
- உறவுகளும் நட்புகளும் வாழ்க்கையெனும் ஆற்றின் இரு கரைகளைப் போன்றது என்பதை அறிந்திடுங்கள்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனிதன் வலிமை பெற வேண்டுமானால், உண்மை மிக்கவனாக வாழ வேண்டும்.
- ஆயிரம் முறை தோல்வி அடைந்தாலும் மீண்டும் ஒருமுறை லட்சியத்தை அடைய முயற்சி செய்யுங்கள்.
- பலவீனத்திற்கு பரிகாரம் பலவீனத்தை சிந்திப்பது அல்ல. மாறாக வலிமையைக் குறித்து சிந்திப்பது தான்.
- கீதை படிப்பதை விட, கால்பந்தின் மூலம் நீங்கள் சொர்க்கத்திற்கு அருகில் இருப்பீர்கள். அதனால், உடல் வலிமை மிக்கவராக ஆகுங்கள்.
- உலகில் யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். உங்கள் லட்சியத்தை நோக்கி உறுதியுடன் செயல்படுங்கள்.
- தன்னை பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கும் சுயநலமே உலகில் மிகப்பெரிய பாவம்.
- சாந்தமான மனநிலை கொண்டவன் நல்லபணிகளில் ஈடுபட்டு, நன்மையைத் தேடிக் கொள்கிறான்.
- மனிதர்கள், விலங்குகளை விட ஒழுக்கமானவர்களாக இல்லை. சமூக பொது அபிப்ராயம் தான் நம்மை ஒழுக்கமுள்ளவர்களாக வைத்திருக்கிறது.

# நோ நேம் அணியை வென்று சம்பியனாகியது ஹரி வொல்



தொடர் நாயகன்




ஹரி வொல் விளையாட்டுக் கழகம்




நோ நேம் விளையாட்டுக் கழகம்

வடமராட்சி குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய அஜந் ஞாபகார்த்தமாக மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் உடுவில் ஹரி வொல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் நோ நேம் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஹரி வொல் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி நிர்ணயிக்கப்பட 6 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து 69 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஹரி வொல் அணி சார்பாக அதிகபட்சமாக கவிசாந் 35 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் நோ நேம் அணியின் கிஷாந்தன் 2 விக்கெட்டுக்களையும் கண்ணா, சுஜீவன் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

70 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நோ நேம் அணி 6விக்கெட்டுகளை இழந்து 48 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதன் மூலம் உடுவில் ஹரி வொல் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. நோ நேம் அணி 2 ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. நோ நேம் அணி சார்பாக ஜசி 30 ஓட்டங்களை பெற்றார்.


பந்து வீச்சில் ஹரி வொல் அணி சார்பாக கவிசாந் ஹட்ரிக் உடன் தொடர்ந்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். பிரதாப், சுரேந்திரன் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஹரி வொல் அணியின் கவிசாந் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் ஆட்ட நாயகனாக நோ நேம் அணியின் கண்ணா தெரிவு செய்யப்பட்டார். (க)



ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் உள்ளூராட்ச்சி மாதத்தினை முன்னிட்டு யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் கலந்து கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையை எதிர்த்து நல்லூர் பிரதேச சபை வெற்றியீட்டியது. (க)

# அனல் பறக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டி இந்தியா-அவுஸ்திரேலியா கடும் வார்த்தை மோதல்



பெர்த்தில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஹோலி மற்றும் டிம்பெய்ன் மாற்றி மாற்றி கிண்டல் செய்து கொண்ட வீடியோ வெளியாகியுள்ளது.

இந்தியா-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி பரபரப்பாக சென்று கொண்டிருக்கிறது. முதல் போட்டியில் தோல்வியடைந்த அவுஸ்திரேலியா அணி இப்போட்டியில் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்று ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

அதன்படி அவுஸ்திரேலியா அணி முதல் இன்னிங்ஸில் 326 ஓட்டங்களும் இந்திய அணி 283 ஓட்டங்களும் எடுத்தன.

இதையடுத்து இரண்டாம் இன்னிங்ஸ் தொடங்கிய அவுஸ்திரேலியா அணி ஆடி வருகிறது. இந்நிலையில் இந்த தொடரில் இந்திய அணியின் இளம் விக்கெட் கீப்பர் ரிசப் பாண்ட் அவுஸ்திரேலிய வீரர்களை ஸ்டம்ப்பிற்கு பின்னால் நின்று வெறுப்பேற்றி வந்தார்.

இதையடுத்து இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் கடைசி ஓவரை, இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மா வீசினார்.

அப்போது மூன்றாவது பந்தை அவுஸ்திரேலிய அணியின் தலைவர் டிம் பெயின் எதிர்கொண்டார். அந்தப் பந்தில், இந்திய வீரர்கள் நடுவரிடம் அப்பீல் செய்தனர்.

ஆனால், நடுவர் அவுட் கொடுக்க மறுத்துவிட்டார். உடனடியா'க இந்திய அணியின் தலைவர் ஹோலி மற்றும் அவுஸ்திரேலிய தலைவர் பெயின் ஆகியோர் வார்த்தை மோதலில் ஈடுபட்டது ஸ்டம்பில் இருக்கும் மைக்கில் பதிவானது.


முதலில் ஹோலி, இவரது விக்கெட்டை வீழ்த்திவிட்டால் தொடரை 2-0 என முன்னிலைபெற்றுவிடும் என்று தெரிவிக்க, பெயின் அதற்கு முதலில் நீங்கள் பட் செய்ய வேண்டும் **Big Head** (பெரிய தல) என்றார்.

ஆனால் பெயின் மற்றொரு அணியின் தலைவரை **Big Head** என்று சொல்ல வாய்ப்பில்லை என அவுஸ்திரேலிய ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வீடியோவில் ஹெட் என்னும் வார்த்தை தெளிவாகக் கேட்கிறது. ஆனால், அதற்கு முன்னர் சொன்ன வார்த்தை தெளிவாகக் கேட்கவில்லை. இதை வைத்து பெரும் விவாதமே நடைபெற்று வருகிறது.

அதன் பின் மூன்றாம் நாள் முடிவுக்கு பின் ஹோலி-பெய்ன் ஏதோ பேசிக் கொண்டு வந்தனர். அது என்ன என்று அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயனிடம் கேட்ட போது, இருவரும் இரவு டின்னருக்கு எங்கு போகலாம் என்று பேசிக் கொண்டதாகக் கூறியுள்ளார். (க)

# இலங்கைக்கெதிரான டெஸ்ட் டாம் லதம் இரட்டைச் சதம்



நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர் டாம் லதம், இலங்கைக்கு எதிரான டெஸ்டில் அபாரமாக ஆடி இரட்டைச்சதம் விளாசியுள்ளார்.

வெலிங்டனில் நடைபெற்று வரும் இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டில், நியூசிலாந்து தனது முதல் இன்னிங்சில் 578 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆகியுள்ளது. தொடக்க வீரர் டாம் லதம் ஆட்டநேர முடிவில் 121 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இந்நிலையில் 3 ஆவது நாளான நேற்று துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த அவர், தான் எதிர்கொண்ட பந்துகளை பவுண்டரிகளுக்கு விரட்டினார்.

அபாரமாக விளையாடிய லதம், டெஸ்ட் அரங்கில் தனது முதல் இரட்டை சதத்தைப் பதிவு செய்தார்.

இதன்மூலம், ஓர் இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் குவித்த 6 ஆவது நியூசிலாந்து வீரர் என்ற பெருமையை டாம் லதம் பெற்றுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## ஒற்றை ஆட்சி...

அடுத்த பாராளுமன்றத் தேர்தலின் ஊடாக அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள நாட்டு மக்கள் தமக்கு ஆதரவளிக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான அரசாங்கம் அமைந்தால் மாத்திரமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நாடுமுழுவதிலுமிருந்து பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

இதில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மூளையில்லாத வர்களால் நாட்டை ஆட்சி செய்ய முடியுமா? என்று கேள்வி எழுப்பினார். நெருப்பின் தாக்கம் அப்பத்தை தாக்குவதில்லை. தாச்சியையே தாக்கும்.

இந்த நிலையில், ஜனநாயகம் என்ற நெருப்பை ஏற்றிவிட்டே தாங்கள் இங்கு வந்திருப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்தான் தேவை என்றால் ஏன் அரசாங்கத்தை கைப்பற்ற வேண்டும்? பாராளுமன்றில் யோசனை ஒன்றை முன்வைத்தால் போதும். எனவே, இங்கு பெரும் சூழ்ச்சி நடந்திருக்கிறது. ஒற்றை ஆட்சி ஊடாகவே அரசியல் தீர்வு.

அதில் இருந்து விலகமாட்டோம் என்றும், தாங்கள் எடுத்த முயற்சிகளாலேயே நீதிமன்றங்கள் சுயாதீனமாக செயற்படுகின்றன என்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தேசிய ஜனநாயக முன்னணி என்ற அரசியல் கூட்டணியை உருவாக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தங்களிடம் குறைகள் இருப்பதாகவும், அவை அனைத்தும் நிவர்த்தி செய்யப்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வவு.செட்டிகுளம் பகுதியில்
## விபத்தில் படுகாயமடைந்த வயோதிபப் பெண் உயிரிழப்பு

(பணிக்கன்குளம்)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் 75 வயதான பெண்மணி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டிருந்தார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மதவாச்சியில் இருந்து மன்னார் நோக்கிசென்ற டிப்பர் வாகனம் செட்டிகுளம் தபால் நிலையத்திற்கு அருகாமையில் சென்று கொண்டிருந்த போது அவ்வீதி வழியே மாடுகளை கலைத்து சென்ற வயோதிப்பெண்ணை மோதியதிலேயே விபத்து இடம்பெற்றதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த பெண்ணை அப்பகுதியில் நின்றவர்கள் மீட்டு செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளிற்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றபட்டார்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலைக்கு மாற்றபட்டு வீட்டிற்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை குறித்த பெண் மரணமடைந்துள்ளார். விபத்தில் பெரியசாமி செவனை என்ற மூதாட்டியே மரணமடைந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,281)

## விட்டுக் கொடுப்புக்கு...

தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித் துள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு மேற்கொள்ளும் முயற்சி காரணமாக, எதிர்க்கட்சி தலைவர் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

எதிர்க்கட்சி தலைவர் பதவி பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அமைய கிடைக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் ஒரு போதும் பாராளுமன்றத்தின் சம்பிரதாயம் அல்லது அரசியலமைப்பிற்கு அப்பால்சென்று செயற்பட முயற்சிக்க மாட்டேன் என தெரிவித்துள்ளார். (ம-3)

## எதிர்க்கட்சி பதவியை...

மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைபின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவை மீண்டும் பிரதமராக நியமித்ததை அடுத்து மகிந்த ராஜபக்ஷ அணியினர் தமக்கு எதிர்க்கட்சி தலைவர்பதவி அந்தஸ்தும்வேண்டும்என முரண்பட்டு வருவதுடன் இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இது குறித்து முறையிட வும் உள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து பிரதான எதிர்க்கட்சியாக தற்போது செயற்பட்டு வரும் தமிழ் தேசியக் கூட்டமைபின் நிலைப்பாட்டினை வினவிய போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

## ஐ.தே.கவினர்...

சிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த பேரணி நேற்று பிற்பகல் காலி முகத்திடலில் ஆரம்பமாகியது.

உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் புதிய பிரதமரின் நியமனம் ஆகிய வெற்றிகளை கொண்டாடும் வகையில் இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

பிற்பகல் காலி முகத்திடலில் ஆரம்பமாகிய இந்த மக்கள் எழுச்சி பேரணி, நீதிக்கான போராட்டம் என்ற தொனிப்பொருளில் நடைபெற்றது. (ம-3)

## 263 ஏக்கர் காணிகள்...

பெற்றது.

இதன்போதே வடக்கு, கிழக்கில் 263 ஏக்கர் காணியை விடுவிக்க தீர்மானிக்கப்பட்டதாக வடக்கு, கிழக்கு ஜனாதிபதி அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவற்றுள் 130 ஏக்கர் அரச காணிகளும், 132 ஏக்கர் தனியார் காணியும் அடங்குகின்றன.

எந்த விதமான நிதி கோரலுமின்றி இந்தக் காணிகளை பாதுகாப்புத் தரப்பினர் விடுவிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம், ஏனைய காணிகளை விடுவிப்பது தொடர்பாக பாதுகாப்பு செயலாளரும் எதிர்வரும் காலங்களில் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோருடன் இணைந்து இந்தக் கலந்துரையாடல்களை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் வடக்கு, கிழக்கு ஜனாதிபதி அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்தார்.

இதேநேரம், வடக்கு, கிழக்கு வீடமைப்புத் திட்டத்தை விரைவாக முன்னெடுப்பது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## தனியார் காணிகளில் படையினர்...

தொடர அனுமதிக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் ஐந்தாவது அமர்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இச்செயலணியின் இதற்கு முன்னரான நான்கு அமர்வுகளின் போது வட, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், அவற்றின் சாதகத்தன்மைகள் தொடர்பாகவும் அத்தீர்மானங்களை நிறைவேற்றுவதில் காணப்படுகின்ற தடைகள் பற்றியும் அவற்றைத் தாண்டி மக்களுக்கு சிறந்த பலனைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய விதத்தில் குறித்த அபிவிருத்தி பணிகளை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பது பற்றியும் இங்கு விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது.

குறிப்பாக வட, கிழக்கு பிரதேசங்களின் காணி விடுவிப்பு, பாதைகள் மற்றும் பாடசாலைகள் விடுவிப்பு, ஆனையிறவு உப்பளம், குறிஞ்சைத்தீவு உப்பளம், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை, முல்லைத்தீவு ஓட்டுத் தொழிற்சாலை, வட, கிழக்கு பிரதேசங்களின் குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதற்கான செயற்திட்டங்கள், படையினரால் நடத்தப்படும் முன்பள்ளிகளின் சமூக தாக்கங்கள், கேப்பாபிலவு காணி விவகாரம், வட்டகச்சி விவசாயப் பண்ணை விடுவிப்பு, ஒலுவில் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட மேலும் பல முக்கிய விடயங்கள் பற்றி இதன்போது விரிவாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், அத்துறை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்க வேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், எஸ்.சிறீதரன், சீனித்தம்பி யோகேஸ்வரன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, கே.கோடீஸ்வரன், அங்கஜன் இராமநாதன், டக்ளஸ்தேவானந்தா, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோர் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் காணப்படும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பற்றியும் அதன்போது எழுகின்ற தடைகள் பற்றியும் விரிவாக சுட்டிக்காட்டினார்கள்.

அக்கருத்துக்களை மிகுந்த ஆர்வத்துடன் செவிமடுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனங்காணப்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வுகளை பெற்றுத்தரக்கூடிய வகையில் அவற்றை புதிய அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும் 2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுதிட்டத்தின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீட்டினை செய்வதாகவும் தெரிவித்ததுடன், தனியார் முதலீட்டாளர்கள் மூலமாகவோ அல்லது அரச-தனியார் கூட்டு முதலீட்டு மூலமாகவோ தற்போது வட, கிழக்கு பிரதேசங்களில் செயலிழந்திருக்கும் தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அத்தோடு தனியாருக்கு சொந்தமான காணிகளில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய செயற்பாடுகள் மேலும் தொடரப்படுவதை அனுமதிக்க முடியாது என்பதனால் அத்தகைய காணிகளை விடுவிப்பதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, யாழ் இராணுவ கட்டளைத்தளபதி தர்ஷன ஹெட்டியாரச்சி, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனெவிரத்ன, அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரச அதிபர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ம-3)

## எதிர்க்கட்சி பதவிக்கு...

மகிந்தவிற்கு கிடைக்கவிருந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி கடந்தமுறை இல்லாமல் செய்யப்பட்டதைப்போல் இந்த முறை முடியாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பாராளுமன்றில் எதிர்த்தரப்பில் இருக்கிறது.

எதிர்க்கட்சிகளில் அதிக ஆசனத்தை நாமே கொண்டுள்ளோம். எனவே மகிந்த ராஜபக்ஷவிற்கு அந்த பதவி கிடைக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணிக்கு 113 ஆசனங்கள் இருக்கவில்லை. ஆனால் கூட்டமைப்பு அதன் 14 உறுப்பினர்களுடன் அதற்கு ஆதரவு கொடுத்ததால், ஐக்கிய தேசிய முன்னணி 117 ஆசனங்களைக் காண்பித்துள்ளது.

இந்த அரசாங்கத்தை உருவாக்கவும், பாதுகாக்கவும் செயற்படும் ஒரு கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்த அரசாங்கத்திற்கு ஒக்சிஜனைக் கொடுப்பதும் அவர்களே. எனவே கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் எவ்வாறு எதிர்க்கட்சித் தலைவராக செயற்பட முடியும்? இங்கு தெளிவான குழப்பம் இருக்கிறது. அரசாங்கத்தைப் பாதுகாக்க, அரசாங்கத்தை உருவாக்கிய கட்சியின் தலைவர் எவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமர முடியும்?

இதனால் என்ன நடக்கும்? எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியை வைத்துக்கொண்டு சம்பந்தன் அரசியலமைப்புச் சபையில் அமர்கிறார். அதில் உள்ளடங்கும் ஒன்பது உறுப்பினர்களில் 7 உறுப்பினர்களை சம்பந்தன் மற்றும் ரணில் தரப்பு எடுத்துக்கொள்கிறது.

இந்த அரசியலமைப்புச் சபை தான் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்து சகல செயற்பாடுகளையும் மேற்கொள்ளும். எனவே அந்த சபையினை எவ்வாறு நாம் சுயாதீன சபை எனக் கூறமுடியும்? அது ரணில் - சம்பந்தரின் சபையாகும் என்றார். (ம-3)

மஹஜன சம்பத
திகதி 2018/12/17
சீட்டிழுப்பு இலக்கம் 3813
D 1 3 1 8 0 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/12/2018
சீட்டிழுப்பு இலக்கம் 319
C 06 36 55 63 75
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.12.17
சீட்டிழுப்பு இலக்கம் 1976
H 22 24 32 42
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
திகதி 2018/12/17
சீட்டிழுப்பு இலக்கம் 1387
17 03 15 25 59 21 67
தேசிய லொத்தர் சபை

## பின் கதவால்...

நடவடிக்கைகளுக்கு தந்தையும் மகனும் கட்டளையிடுவது காணொலி ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, பாராளுமன்றில் நிலையான உறுதியான அரசு அமைக்கப்படும். அரசின் முதல் முக்கிய பணியாக கடந்த மகிந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நிதிமோசடிகள் தொடர்பான நீதி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.(ம)

## நெடுந்தீவில் எட்டு...

னுள் மீன் பிடியில் ஈடுபட்டவேளை கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட எட்டு மீனவர்களையும் யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறையினரிடம் கடற்படையினர் நேற்று மதியம் ஒப்படைதனர். எட்டு மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்க்கான நடவடிக்கைகளை நீரியல் வளத்துறையினர் முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## பேச்சு...

அமைச்சு பதவிகளை பகிர்ந்தளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-3)

## பெரும்பான்மை...

இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் தலைமையிலான புதிய அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இல்லை. ஆனால் நல்லாட்சிக்கு பெரும்பான்மை இருந்தது. அன்று எம்பக்கம் 54 பேர் இருந்தனர்.

ஆனால் தற்போது 100 பேர் எம்முடன் உள்ளனர். எனவே பெரும்பான்மை இல்லாத அரசினால் சமஷ்டி அரசியல் யாப்பைக் கொண்டுவர முடியாது. தற்போது கூட்டமைப்புடன் தொடர்பு இல்லை என்பதை காண்பிக்க சுதந்திர கூட்டமைப்பில் உள்ள பலருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க இவர்கள் முற்படுகின்றனர்.

கடந்த நாட்களில் மகிந்த ஆட்சி பொறுப்பில் இருக்கும் போது சமஷ்டி யாப்பை கொண்டு வருவது தடுக்கப்பட்டது. அதேபோல் வரிச்சுமை குறைக்கப்பட்டது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)


### வேலைவாய்ப்பு

எமது சர்வதேச நிறுவனமான GMIயில் O/L பயிற்சியெய்திய இளைஞர், யுவதிகளுக்கான முகாமைத்துவ பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள்.

- நீங்கள் 18 - 28 வயதுக்கு உட்பட்டவராயின்
- கணினி அறிவு
- நிருவகிக்கும் ஆற்றல் உள்ளவராயின் மேலதிக தகைமையாக கருத்தில் கொள்ளப்படும்.
- பயிற்சியின் போது 12,000/= - 18,000/= வரை பின்னர் குறைந்தது 45,000/= EPF, ETF

இன்றே அழைக்க பதிவுகளுக்கு:
076 770 7759
GMI, 423, Stanly Road, Jaffna.
(8734)

### விஸ்டம்
விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தொழினுட்பப் பிரிவு ஆரம்பித்ததிலிருந்து தொடர்ச்சியாக தேசிய முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

தொழில் நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்

- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி

20.12.2018 வியாழக்கிழமை காலை 8.30
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புக்கு : 077 248 7774
(C-4730)
தரம், தனித்துவம், உயர்ந்தபெறுபேறு இதுவே எமது இலக்கு

### கல்வி – தொழில் வழிகாட்டி சேவையில் 10வது ஆண்டில் காலடி பதிப்பதை முன்னிட்டு

Emerald Isle
License No.2268
உடன் இணைந்து
SIKARAM ACADEMY
Sri Lankan Entrepreneur of the Year 2017
நடாத்தும்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு
கண்காட்சியும் அனுமதிகளும்
மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் மேற்குநாடுகள்
ஹொட்டேல், கட்டடவாக்கம், தொழில்நுட்பம், சுகாதாரம், பொறியியல், வர்த்தகம், மருத்துவம், போக்குவரத்து உட்பட சகல துறைகளிலும்

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
|---|---|
| டிசம்பர் 20, 21, 22 | டிசம்பர் 28 |
| சிகரம் விரிவுரை மண்டபம் | மாவட்ட செயலக மாநாட்டு மண்டபம் |

தினமும் காலை 9 மணி முதல் 4 மணி வரை
பிரவேசம் இலவசம்!
மேலதிக விபரங்கள் உங்கள் பகுதி கிராமசேவையாளர்களிடம்
221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை). யாழ்ப்பாணம்
0777 324 004, 077 00 38 215, 021 221 9 221
(C-1753)

### ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 076 707 0069
M.Suren

### விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-4653)

DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
0768226240
V2 TRAVELS
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - சாவகச்சேரி
- நெல்லியடி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

### வேலைவாய்ப்பு
O/L, A/L முடித்த உங்களுக்கு சகல பிரதேசத்திலும் வேலைவாய்ப்பு - 150
(C-4749)
பயிற்சியின் போது உணவு, தங்குமிட வசதியுடன் 14,500/= - 25,000/= வரையிலான சம்பளம். பயிற்சியின் பின் 45,000/= க்கு மேல் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம்.
எமது யாழ்ப்பாண கிளை மூலம் உங்கள் பதிவினை மேற்கொள்ளலாம்.
30 வயதுக்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும். 0766668385

### Techno World
(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)
A/L தொழில்நுட்ப பிரிவு - 2021
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
22.12.2018 சனிக்கிழமை காலை 9.00 மணி
நவீன ஆய்வுகூட வசதிகளுடன்....
பொறியியல் தொழில்நுட்ப பிரிவு மாணவன் கோகுலன் (JHC)... மாவட்ட நிலை 3 2A,B தேசிய நிலை 20 Z புள்ளி 2.9808...
முதன் முறையாக 2017 இல் க.பொ.த. உ/த பரீட்சையில் தொழில்நுட்பப் பிரிவில் தோற்றி சாதனை படைத்த எமது கல்லூரி மாணவர்களின் பெறுபேறுகள்

உயிர்முறைமைதொழில் நுட்பம்

| Rank | Name |
|---|---|
| 1 | கேசனா - A2B, I.R-29 Z-2.4745 |
| 3 | சரண்சனா |
| 4 | சி.திசாந்தினி |
| 7 | சி.டிலோஜி |
| 8 | பராந்தகன் |
| 9 | ஜெனோயன் |
| 10 | சோ.சாருஜீ |
| 11 | மாருதன் |
| 12 | கு.விதுஷன் |
| 13 | ந.உமாசாளினி |
| 18 | த.யான்சன் |
| 19 | நா.அபிஷேகா |
| 20 | ந.லலிதாயினி |
| 23 | வானுயன் |
| 24 | ப.விந்துயா |
| 25 | புவாத் |
| 23 | சௌமியா |
| 24 | யதுப்பிரியா |

கிளிநொச்சி மாவட்டத்தில்

| Rank | Name |
|---|---|
| 2 | மேரிகனிஸ்ரா |
| 4 | துசாந்தி |
| 5 | சசிப்பிரியா |
| 9 | ஜனுசனா |
| 10 | துசி |
| 15 | லகுவன் |
| 17 | சஞ்சிவன் |
| 18 | கோவர்த்தன் |
| 19 | கார்த்திகா |
| 30 | சுபோதினி |
| 26 | பானுயன் |
| 36 | சயிந்தன் |

பொறியியல் தொழில்நுட்பம்

| Rank | Name |
|---|---|
| 3 | கோகுலன் |
| 1 | தமிழினியன் - 3B-2.0458 |
| 4 | பிரவீன் |
| 12 | கோபிஸ்காந்த் |
| 18 | டக்ஸன் |
| 22 | நதீஸ்ரன் |
| 31 | யதுகுலன் |
| 35 | மதுசன் |
| 38 | தர்சன் |
| 44 | கஸ்வின் |
| 46 | அனுசன் |
| 49 | கிரிசாந்த் |
| 54 | குகராஸ் |
| 57 | துஸியந்தன் |
| 58 | செவின்ஸ் லெலோஸ் |

கிளைகள்: யாழ்ப்பாணம், புத்தூர்(சோமஸ்கந்தா அருகாமை)
0770175346, 077 1703549

### DMI Jaffna
A/L 2K21
கணக்கீடு
D.Sam
ஜனவரி 5
காலை 09

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

### கிழவன்காடு கலாமன்றம்
(6718)
நடத்தும்
தெய்வீகக் கலையரங்கு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 19.12.2018 புதன்கிழமை
நேரம் : மாலை 5.00 மணி

நிகழ்ச்சி நிரல்
- வேதபாராயணம் : தென்னிந்திய மற்றும் ஈழத்து வேதவிற்பன்னர்கள்
- திருவாசக ஓதல் : "திருவாசகக் குயில்" காரை லீலாவதி இராசரத்தினம் (கலாமன்ற பண்ணிசை ஆசிரியர்)
- சொற்பொழிவு : "நாடகப்பாவை" தமிழருவி காரை த.சிவகுமாரன்
- கலாநிதி ஸ்ரீமதி கிருஷாந்தி ரவீந்திரா அவர்களின் நெறியாள்கையில் "சிவானந்த தரிசனம்" நாட்டிய அர்ப்பணம்.
- நாதஸ்வர இளவரசு K.P.குமரன் குழுவினர் வழங்கும் "நாத சங்கமம்"

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.
(C-4778)
குறிப்பு: நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை யாழ். கிளையிலிருந்து (இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம்) பிற்பகல் 4.15 மணிக்கு ஆரம்பமாகும். (யாழ். வண்ணை சிவன் கோவில் அருகாமையில்)

### அதிபர் சேவை
தரம் - 3
விசேட வகுப்பு
ஆரம்பம் : புதன் 19.12.2018
புதன் (19/12), வெள்ளி (21/12), சனி (22/12), ஞாயிறு (23/12)
காலை 9.00-3.00 மணிவரை
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

### வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.